بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 37

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 - ஸஃபர் 27 ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - தபூக் 14
14 செப்டம்பர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَقَدْ صَرَّفْنَا لِلنَّاسِ فِيْ هٰذَا الْقُرْاٰنِ مِنْ كُلِّ مَثَلٍ ۫ فَاَبٰۤى اَكْثَرُ النَّاسِ اِلَّا كُفُوْرًا ۝٩٠

**பொருள் :**

நிச்சயமாக நாம் மக்களுக்காக இந்தக் குர்ஆனில் (முக்கியமான) ஒவ்வொரு செய்தியினையும் பல்வேறு கோணங்களில் விளக்கிவிட்டோம். இவ்வாறிருந்தும் பெரும்பாலானவர்கள் நன்றிகேடு காட்டியவாறு நிராகரித்து விட்டனர்.(17:90)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனது கோட்பாடு என்னவென்றால் துஆவில் எதிரிகளையும் கூட விலக்கி வைக்கக் கூடாது. துஆ எந்த அளவிற்கு விசாலமானதாக இருக்குமோ அந்த அளவிற்கு துஆ செய்யக் கூடியவருக்கு நன்மை கிடைக்கும். துஆவில் எந்த அளவிற்கு கருமித் தனம் செய்யப்படுமோ அந்த அளவிற்கு அவர் அல்லாஹ்வின் நெருக்கத்திலிருந்து விலகிக் கொண்டே செல்வார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து

நினைவிற் கொள்ளுங்கள்! அனுதாபம் மூன்று வகைப்படும். முதலாவது, உடல் உழைப்பின் மூலம் செய்யப்படுவது, இரண்டாவது செல்வத்தின் மூலமாக (செய்யப்படுவது), அனுதாபத்தின் மூன்றாவது வகை என்பது துஆ (செய்தல்) ஆகும். இதில் (அதாவது மூன்றாவது வகையான அனுதாபத்தில்) பணமும் செலவாகுவதில்லை ; கடினத்தை மேற்கொள்வதற்கும் அவசியம் இல்லை. இதன் பயன் மிகவும் விசாலமானதாகும். ஏனெனில், உடல் உழைப்பின் மூலமான அனுதாபத்தை மனிதனிடத்தில் ஆற்றல் இருக்கும் நிலையில் தான் அவனால் செய்ய முடியும். உதாரணமாக, இயலாத, ஆதரவற்ற ஏழை ஒருவர் காயப்பட்டு ஓரிடத்தில் விழுந்து கிடக்கின்றார் என்றால் எந்த ஆற்றலும், சக்தியும் இல்லாத நபரால் சுமந்து கொண்டு சென்று எப்படி உதவி செய்ய முடியும்? அதேபோன்று வறியவரும், சக்தியற்றவரும், எந்த ஆதரவும் இல்லாத ஏழை மனிதர் பசியினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்றால், பணம் இல்லாத ஒருவரால் எப்படி அவர் மீது அனுதாபம் காட்ட முடியும். ஆனால், துஆ மூலம் செய்யப்படும் அனுதாபம் எப்படிப்பட்ட அனுதாபம் என்றால் அதனை செய்வதற்கு செல்வத்திற்கும் அவசியம் இல்லை ; எந்த ஒரு வலிமையும் தேவை இல்லை. மாறாக மனிதன் மனிதாக இருக்கும் வரை அவனால் பிறருக்காக துஆ செய்ய முடியும். மேலும், பிறருக்கு நன்மை செய்ய முடியும். இந்த அனுதாபத்தின் பயன் மிகவும் பரந்துபட்டதாகும். இந்த அனுதாபத்திலிருந்து மனிதன் பயன் பெறவில்லையென்றால் பின்னர் புரிந்து கொள்ளுங்கள் அத்தகைய மனிதன் மிகவும் நற்பேறு கெட்டவர் ஆவார்.

செல்வத்தின் மூலமான அனுதாபம் மற்றும் உடல் உழைப்பின் மூலமான அனுதாபத்தை மேற்கொள்வதில் மனிதன் சில கடினங்கள் இருக்கின்றன. ஆனால், துஆவின் மூலமான அனுதாபத்தில் மனிதனுக்கு எந்த நிர்பந்தமும் இல்லை. எனது கோட்பாடு

**இதன் தொடர்ச்சி : 10-ம் பக்கம்.....**

**அவர்கள் உம்மிடம் ஆன்மாவைக் குறித்து கேள்வி எழுப்புகின்றனர். எந்த ரூஹைப் பற்றி கேட்கப்படுகிறதோ அது என்ன விஷயம்? ஜிப்ராயீல் ஆவார் என்று சிலர் பொருள் கொண்டுள்ளனர். சிலரோ திருக்குர்ஆன் என்றும், இன்னும் சிலரோ வானவர்கள் என்றும் பொருள் கொண்டுள்ளனர்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாக இந்த வசனத்தைக் குறித்து விவரித்துள்ளார்கள். மேலும் அதற்கு மனித ஆன்மாவே என்று பொருள் கொடுத்துள்ளார்கள்**

وَيَسْـَٔلُوْنَكَ عَنِ الرُّوْحِ ؕ قُلِ الرُّوْحُ مِنْ اَمْرِ رَبِّيْ وَمَاۤ اُوْتِيْتُمْ مِّنَ الْعِلْمِ اِلَّا قَلِيْلًا ۝٨٦ (17:86)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: இங்கு ஆன்மாவைக் குறித்து அது என்ன? என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் அதற்கு பல்வேறு விளக்கங்களை கொடுத்துள்ளனர். அதன் பொருள் ஜிப்ராயீல் ஆவார் என்று சிலர் பொருள் கொடுத்துள்ளனர். வேறு சிலரோ அதன் பொருள் திருக்குர்ஆன் என்று கூறியுள்ளனர். ஏனெனில், அதற்கு முன்னரும், அதற்கு பின்னரும் திருக்குர்ஆன் பற்றிய குறிப்பு உள்ளது. (பஹ்ரே முகீத்). இன்னும் வேறு சிலரோ அதன் பொருள் எந்த வானவரிடம் உலகின் படைப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த வானவர் ஆவார் என்று கூறியுள்ளனர். எல்லா வானவர்களும் ரூஹ் என்று கூறப்படுவர் என்று கூறியுள்ளனர். வேறு சிலரது பார்வையில், (இறைவனின் தூய்மையை எடுத்துரைத்து) தஸ்பீஹ்

**இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்....**

## நபிமொழி

**அல்லாஹ் தனது அடியார்களின் குறைகளை மறைத்து திரையிடுகின்றான்**

(2441) ஹஸ்ரத் (அப்துல்லாஹ்) இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்: அல்லாஹ் நம்பிக்கையாளரை எந்த அளவிற்கு நெருக்கமாக்கிக் கொள்வான் என்றால் அவருக்கு அல்லாஹ் தனது கருணையின் நிழலை வழங்குவான். மேலும் அவரது குறைகளை திரையிடுவான். மேலும், உனக்கு (நீ செய்த) இன்ன பாவத்தைப் பற்றி தெரியுமா? என்று கேட்பான். அப்போது, எனது இறைவா! ஆம் (அறிவேன்) என்று அடியார் கூறுவார். எந்த அளவிற்கு என்றால் அந்த அடியார் தான் செய்த அனைத்து பாவங்களையும் ஒப்புக் கொண்டு விடுவார். மேலும், நான் அழிந்து விடுவேன் என்று அந்த நம்பிக்கையாளர் தனது உள்ளத்தில் கருதுவார். அப்போது உலகில் நீ செய்த அனைத்து பாவங்களின் மீதும் நான் திரையிட்டேன்; இன்றும் நான் உனது பாவங்களின் மீது திரையிடுவேன் என்று அல்லாஹ் கூறுவான். பின்னர் நன்மைகளுக்கான பதிவேடு கொடுக்கப்படும். மேலும், நிராகரிப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் இருப்பார்கள். இந்த மக்களே தமது இறைவனின் மீது பொய்யை இட்டுக்கட்டினர்; எச்சரிக்கை ! (இந்த) அநீதியாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக! என்று அவர்களைப் பார்த்து சாட்சிகள் கூறுவர்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, காதியான் பதிப்பு - 2008ம் ஆண்டு )

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மழை போன்று பொழியக் கூடிய இறை உதவிகள் மற்றும் அருட்களைக் குறித்த ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

இறுதி வேதமான திருக்குர்ஆனை படிப்பதற்கும், கேட்பதற்கும் நான் கூறியதுபோன்று பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்கு இது ஒரு மாபெரும் குற்றம் ஆகும். ஆனால், அதே வேதத்தின் மூலமாகவே அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து வருகின்றது. மேலும், உலகை சீர்திருத்தி வருகின்றது.

பாகிஸ்தானில் எங்களை எதிர்க்கக் கூடிய எதிரிகள் எதிர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் எங்களை எதிர்க்கக் கூடாது. மாறாக, எங்களது போதனைகளைக் கேட்க வேண்டும்; படிக்க வேண்டும்; புரிய வேண்டும். பின்னர், உங்களுக்கு இருக்கும் ஆட்சேபனையை முன்வைக்க வேண்டும். நீங்கள் வெறுமனே எதிர்ப்பு தெரிவிக்கின்றீர்கள். முதலில் எனது கூற்றை கேளுங்களேன் என்று இதனையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும், மீண்டும் கூறியுள்ளார்கள்

உலகின் பல்வேறு நாடுகளில் அல்லாஹ்வின் இந்த நடைமுறை உள்ளது. அதாவது அல்லாஹ்வின் ஆதரவு எல்லா இடங்களிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இருப்பது தென்படுகின்றது. அன்னார் (அலை) நமக்கு உண்மையான இஸ்லாமிய போதனையை வழங்கினார்கள். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மைக்கு மிகப் பெரிய சான்று ஆகும். இந்த சம்பவங்களும், இந்த விஷயங்களும் அல்லாஹ்வின் அருளினால் மக்களின் ஈமானை வலுப் பெறச் செய்து வருகின்றன. அல்லாஹ் உலகத்தினரின் கண்களையும் திறப்பானாக. மேலும் அவர்களுக்கு ஈமானுடனும், உறுதியுடனும் ஒப்புக் கொள்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 ஆகஸ்ட் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **வஃபா** மாதம் **11 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருட்களின் மழை ஒவ்வொரு நாளும் பொழிகின்றது. அதனைப் பற்றி ஜல்ஸாவின் அறிக்கையில் எடுத்துரைக்கப்படுகின்றது. குறுகிய நேரத்தில் எல்லாவற்றையும் எடுத்துரைப்பது சாத்தியமில்லை என்று நான் அங்கு கூறியிருந்தேன். அல்லாஹ் எவ்வாறு அருள் புரிகின்றான்? எவ்வாறு மக்களின் உள்ளங்களை ஜமாஅத்திற்கு ஆதரவாக திறக்கின்றான்? எவ்வாறு ஈமான்களை அல்லாஹ் வலிமையூட்டுகின்றான்? எவ்வாறு எதிரிகளை தோல்வியுறச் செய்கின்றான்? (இது தொடர்பான) எண்ணற்ற சம்பவங்களை மக்கள் எழுதிக் கொண்டு வருகின்றனர். அவற்றிலிருந்து சிலவற்றை நான் இன்றும் எடுத்துரைப்பேன். ஏனெனில், இந்த சம்பவங்கள் ஏராளமான அஹ்மதிகளின் உள்ளங்களில் ஈமானின் வலிமைக்கும் காரணியாக அமைகின்றன.

அல்லாஹ் எவ்வாறு தப்லீஃக்கின் பல்வேறு வழிமுறைகளின் மூலமாக நற்பேறு பெற்ற ஆன்மாக்களை ஜமாஅத்திற்கு கொண்டு வருகின்றான்? மேலும் எவ்வாறு புதிய ஜமாஅத்துகள் உருவாகின்றன? என்பது தொடர்பாக கோன்கோ கன்ஷாவிலிருந்து உள்ளூர் மிஷனரி ஹமீது ஸாஹிப் எழுதுகின்றார்கள். அங்கு நமது எஃப் எம் ரேடியோவும் உள்ளது. அவர் எழுதுகின்றார்: உவைரா (Uvira) நகரத்தில் நமது ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்டு விட்டு உள்ளூர் இமாம் மஸ்ஜித் ஈஸா ஸாஹிப் அவர்கள் தொடர்பு கொண்டார்கள். மேலும், அன்னார் பிறகு மிஷன் ஹவுஸிற்கு வருகை தந்தார்கள். ஜமாஅத்தின் தூதுச் செய்தியைப் புரிந்து கொண்டார்கள்; பைஅத்தும் செய்து விட்டார்கள். பைஅத் மட்டும் செய்யவில்லை. மாறாக, கில்லீபா ஓன்டேஸி (Killiba ondezi) என்ற தமது கிராமத்திற்குச் சென்று தப்லீஃக் செய்யவும் தொடங்கிவிட்டார்கள். அன்னாரின் தப்லீஃக்கின் விளைவால் 24 நபர்கள் அஹ்மதிய்யத்தில் நுழைந்து விட்டார்கள். நமது தலைமையக முபல்லிஃக் ஸாஹிப் அங்கு சுற்றுப் பயணம் செய்தபோது மேலும் கூடுதலாக 8 நபர்கள் பைஅத் செய்துவிட்டனர். இவ்வாறு அங்கு ஜமாஅத் நிலைபெற்று விட்டது. தற்போது ஒரு பக்கம் நல்லியல்பு படைத்த இமாம் இருக்கின்றார்கள். ஜமாஅத்தின் தூதுச் செய்தியை செவியுற்று அதனை புரிவதற்கு அல்லாஹ் அன்னாருக்கு நற்பேறு வழங்கியுள்ளான். மற்றொரு பக்கமோ பாகிஸ்தானி ஆலிம்கள் இருக்கின்றனர். அவர்களோ எதிர்ப்பைத் தவிர வேறெதனையும் அறிவதில்லை.

கோன்கோ கன்ஷாஸா நாட்டின் மாயி நடோமே (Mai-Ndombe) என்ற ஒரு கிராமத்தில் உமர் முனவர் ஸாஹிப் என்ற ஒரு முஅல்லிம் ஸாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் தப்லீஃக்கிற்காக அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். வஹ்ஹாபி முஸ்லிம்களின் ஒரு பள்ளிவாசலுக்கு அன்னார் சென்றார்கள். மக்களுக்கு அன்னார் பிரசுரங்களை விநியோகம் செய்தார்கள். சில தீங்கு விளைவிக்கும் இளைஞர்கள் மஸ்ஜிதிலிருந்து வெளியேறி கூச்சலிடத் துவங்கி விட்டார்கள். மேலும், பின்னர் கல் எறியத் துவங்கி விட்டனர். ஆஃப்ரிக்காவிலோ மக்கள் படிக்காதவர்களாக இருக்கின்றனர்; எனவே விஷயங்களை கேட்ட உடனேயே நம்பி விடுகின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

ஆனால் அங்கும் எதிர்ப்பு உள்ளது. முஅல்லிம் ஸாஹிப் கல் வீச்சிலிருந்து தற்காத்துக் கொண்டவாறு மற்ற மக்களுக்கு தப்லீஃக் செய்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்த மக்கள் அன்னாரின் பொறுமை மற்றும் தைரியத்தால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகியவாறு மீண்டும் பள்ளிவாசலுக்குள் வந்துவிட்டனர். மேலும், அன்னாரின் பேச்சைக் கேட்கத் துவங்கிவிட்டனர். ஜமாஅத்தைக் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன ; ஆட்சேபனைகள் செய்யப்பட்டன. ஏராளமான கேள்விகளுக்கு பதில் கொடுக்கப்படடது. அப்போது, நீங்கள் லண்டனுக்கு சென்று ஹஜ் செய்கின்றீர்கள்; ஆனால் இறைத் தூதர் (ஸல்) அவர்களோ எல்லா ஹஜ்களையும் மக்காவில் தான் செய்தார்கள் என்று மிக அதிகமாக பேசிக் கொண்டிருந்த ஒரு தீங்கிழைக்கும் வாலிபன் கூறினான். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனை ஹஜ் செய்தார்கள்? என்று கூறும்படி முஅல்லிம் ஸாஹிப் அவனிடம் கேட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் ஹஜ் செய்துள்ளார்கள் என்று அந்த வாலிபன் கூறினான். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹஜ் மட்டுமே செய்துள்ளார்கள் என்று முஅல்லிம் ஸாஹிப் கூறினார்கள். அப்போது, நீங்கள் அனைவரும் குழப்பம் செய்கின்றீர்கள் என்று மஸ்ஜிதில் அமர்ந்திருந்த இமாம் மற்றும் பெரிய வயதுடைய மக்கள் அந்த வாலிபரை ஏசி பேசினர். எவ்வாறு இருப்பினும், குழப்பம் விளைவித்த அந்த மக்கள் வெட்கத்திற்குள்ளாகி அங்கிருந்து சென்று விட்டார்கள். அதன் பிறகு, இமாம் ஸாஹிப் ஜமாஅத் குழுவினரை தமது வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு அன்னார் மட்டுமின்றி இன்னும் இரண்டு ஆலிம்கள் இருந்தனர். மேலும்,சில நபர்களும் இருந்தனர். இவ்வாறு 40, 42 நபர்கள் அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த தப்லீஃக்கினால் தாக்கத்திற்கு ஆளாகி பைஅத் செய்துவிட்டனர். மேலும், இங்கும் ஒரு புதிய

ஜமாஅத் நிலைபெற்று விட்டது.

கினிபஸாவிலிருந்து இமாம் தமா அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும், திருக்குர்ஆனையும், ஹதீஸையும் ஒப்புக் கொள்வதில்லை என்றே இது வரை நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி செவியுற்று வந்தோம். ஆனால், இன்று நாங்கள் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்திருந்தோம். கூறுகின்றார்கள்: இன்று இந்த ஜல்ஸாவின் அருளினால் நாங்கள் தங்களின் கலீஃபாவைப் பார்த்தோம்; செவியுற்றோம். திருக்குர்ஆன், ஹதீஸ் என்று அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகியோரின் அறிவுரைகளையே அன்னார் எடுத்துரைத்தார்கள். கூறுகின்றார்கள்: ஜமாஅத்தைக் குறித்து பொய் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது; மேலும், எப்போதும் இறை ஜமாஅத்துகளுக்கு எதிராக பொய் பிரச்சாரம் செய்யப்படுகின்றது என்று இன்று எனக்கு உறுதி ஏற்பட்டுவிட்டது.

இந்த இமாம் ஸாஹிப் இதே மஸ்ஜிதின் இமாமாக இருந்தார்கள். கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றேன். மேலும், நான் எல்லா மக்களுக்கும் ஜமாத்தைக் குறித்து தப்லீஃக் செய்வேன்.

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் தப்லீஃக் செய்தும் வருகின்றார்கள். மேலும் அன்னாரின் தப்லீஃக்கின் மூலமாக புதிய ஜமாஅத்துகளும் நிறுவப்பட்டு வருகின்றன.

எனவே பாகிஸ்தானில் எங்களை எதிர்க்கக் கூடிய எதிரிகள் எதிர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் எங்களை எதிர்க்கக் கூடாது. மாறாக, எங்களது போதனைகளைக் கேட்க வேண்டும்; படிக்க வேண்டும்; புரிய வேண்டும். பின்னர், உங்களுக்கு இருக்கும் ஆட்சேபனையை முன்வைக்க வேண்டும்.

நீங்கள் வெறுமனே எதிர்ப்பு தெரிவிக்கின்றீர்கள். முதலில் எனது கூற்றை கேளுங்களேன் என்று இதனையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும், மீண்டும் கூறியுள்ளார்கள். (ஸிராஜே முனீர், ரூஹானி கஸாயீன், தொகுதி 12, பக்கம் 4)

எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அல்லாஹ் எவ்வாறு நமக்கு உதவி செய்கின்றான்? என்று லைபீரியா அமீர் ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிம்பா (Nimba) கவுண்டியின் ஒரு டவுண் பகுதியான கேனாகலே (Ganaglay)-யின் பகுதியில் சில மக்கள் அஹ்மதிய்யத்தில் சேர்ந்துள்ளனர். முன்னர் அவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அல்லது மார்க்கமற்றவர்களாக இருந்தனர். பைஅத் செய்த பிறகு அந்த சகோதரர்களின் தர்பிய்யத் மற்றும் தொழுகைக்கான ஏற்பாடு ஒருவருடைய வீட்டின் முற்றத்தில் செய்யப்பட்டிருந்தது. ஒருநாள் தொழுகைக்குப் பிறகு, அல்லாஹ் நமக்கு மஸ்ஜித் கட்டுவதற்காக ஓர் உகந்த இடத்தை வழங்குவதற்காக துஆ செய்யும் படி உள்ளூர் முபல்லிஃக் முர்தஸா ஸாஹிப் அவர்கள் ஜமாஅத் சகோதரர்களிடம் கூறினார்கள். இந்தப் பகுதி கிறிஸ்தவம் மற்றும் மார்க்கமற்றவர்களின் கோட்டையாக இருக்கின்றது. மேலும் இந்த மக்கள் முஸ்லிம்களை நல்லவர்களாக கருதுவதில்லை. எனவே மஸ்ஜிதிற்காக இடம் கிடைப்பது மிகவும் கடினமானதாக இருந்தது. தற்போது பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருந்தது. அந்நிலையில், மார்க்கமற்றவராகவும், இறையிருப்பின் மீது நம்பிக்கை கொண்டிருக்காத நபராகவும் இருந்த மிஸ்டர் டாகன் என்பவர் அங்கு அமர்ந்திருந்தார். அவர் எழுந்து நின்று கூறினார்: மிஷினரி எங்கள் கிராமத்திற்கு வரத் துவங்கியது முதல் நான் அவரிடம் மிகவும் நல்ல பண்புகளைக் கண்டுள்ளேன். எல்லா மக்களையும் சந்திக்கின்றார். ஒரே பாத்திரத்தில் உணவு உண்கின்றார். எந்த அளவிற்கு என்றால், கடவுளை ஏற்காத மேலும் மது அருந்துகின்ற எனக்கு அருகில் கூட வந்து அமர்ந்து விடுகின்றார். மேலும் சூழலையும், நிலைமைகளையும் விசாரிக்கின்றார். எனக்கு இதுபோன்ற நற்பண்புகளைக் கொண்டவர்கள் காணக் கிடைக்கவில்லை. என்னிடம் ஒரு பிளாட் உள்ளது. அதில் நான் வீடு கட்டுவதற்கு எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால், இன்று நான் அந்த பிளாட்டை மஸ்ஜிதிற்காக கொடுக்கின்றேன். ஆக, சில நாட்களுக்குப் பிறகு முறையாக அவர் பைஅத்தும் செய்து விட்டார். மது அருந்துவதை முற்றிலுமாக கைவிட்டுவிட்டார். இந்த புரட்சி ஏற்பட்டுள்ளது. மேலும், தூய்மையிலும் முன்னேறிக் கொண்டே சென்றுவிட்டார். தூய்மையில் எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டார் என்றால், இவர் முற்றிலும் மாற்றமடைந்த மனிதர் ஆகிவிட்டாரே என்று மக்களே கண்டனர். இங்கு பள்ளிவாசல் கட்டுமானப் பணியும் துவங்கி விட்டது. அங்கு மஸ்ஜித் கட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று மக்கள் கிராமத் தலைவரிடம் அழுத்தம் கொடுத்தனர். ஆனால், நான் மஸ்ஜித் கட்டுவதற்காக இடம் கொடுத்து விட்டேன்; மேலும் இங்கு மஸ்ஜித் கட்டப்படும் என்று மிஸ்டர் டாஹன் மிகவும் துணிவுடன் கூறிவிட்டார்.

ஆக, இந்த மஸ்ஜித் முழுமையாக கட்டப்பட்டும்விட்டது. இது இந்தப் பகுதியின் முதல் மஸ்ஜித் ஆகும். அதன் பெயர் நூர் ஆகும். இவ்வாறு முஸ்லிம் அல்லாதோரும் மற்றும் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளாத நாத்திகவாதிகளான மக்களும் கூட அல்லாஹ்வின் அருளினால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்கின்றனர் என்பது மட்டும் அல்ல ; மாறாக, இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதையும் புரிந்து கொள்கின்றனர்.

பர்வன்டியில் நயான்ஸா என்ற ஓர் ஊர் உள்ளது. இங்கு ஜமாஅத்திற்கு பெரும் அளவில் எதிர்ப்பு உள்ளது. ஏனெனில், இந்தப் பகுதிகளில் முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஜமாஅத்தினுடைய மஸ்ஜிதை பூட்டிவிட வேண்டும் என்று சன்னிப் பிரிவு மஸ்ஜிதினுடைய இமாம் எல்லா வகையிலும் முயற்சி செய்தார். அதற்காக அவர் அரசாங்க அதிகாரிகளையும் சென்று சந்தித்தார். ஆனால், அவரது முயற்சிக்கு ஒன்றும் கை கூடவில்லை. நமது முஅல்லிம் ஹம்ஸா இந்தூ வீமானா ஸாஹிபிடம், அந்த மஸ்ஜிதின் இமாம் கேள்வி-பதில் நிகழ்ச்சிக்காக அழைத்தார். கேள்வி-பதில் நிகழ்ச்சியில் ஈஸா மஸீஹின் மரணம் குறித்து தர்க்கம் ஆரம்பமானது. பரிசுத்த திருக்குர்ஆனின் ஆதாரங்களின் மூலம் ஈஸா மஸீஹின் மரணத்தை முஅல்லிம் ஸாஹிப் நிரூபணம் செய்தபோது அந்த பெயர் தாங்கி ஆலிம்களால் பதில் அளிக்க முடியவில்லை. ஆனால், சண்டையிடத் துவங்கிவிட்டார். மேலும், ஜமாஅத்தின் மீது குஃப்ர் ஃபத்வாக்களை கொடுத்து விட்டார். அப்போது ஒரு கிறிஸ்தவர் எழுந்து நின்று ஜமாஅத்தின் கருத்திற்கு ஆதரவளித்தார். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் முஸ்லிம் ஆவர்; உங்களுடைய இஸ்லாம் புரிதலுக்கு அப்பாற்பட்டது என்பதை அந்த மவ்லவிக்கு விளக்கினார்.

இவர்கள் என்ன கூறுகின்றனர்? என்பது அவர்களுக்கு கூட புரிகின்றது. மற்றொரு பக்கம் அந்த மஸ்ஜிதுடைய மவ்லவிமார்கள் மஸ்ஜிதிற்கு உள்ளேயே தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். மேலும், இதன் காரணமாக அரசாங்கத்திற்கு தலையிட வேண்டிய சூழல் ஏற்பட்டது. மேலும், அந்த மஸ்ஜிதை மூன்று மாதங்களுக்கு அரசாங்கம் பூட்டி விட்டது. எவர்கள் நமது பள்ளிவசாலுக்கு பூட்டுப் போட வேண்டும் என்று விரும்பினரோ அவர்களின் சொந்த நிலை என்னவாயிற்று என்றால் அவர்களின் பள்ளிவாசல் பூட்டப்பட்டு விட்டது.

அஹ்மதிகளின் பள்ளிவாசலுக்குப் பூட்டுப் போட வேண்டும் என்று தற்போது பெயர் தாங்கி ஆலிம்கள் எல்லா இடத்திலும் இந்த வழிமுறையை முறையான சதித் திட்டத்துடன் மேற்கொள்கின்றனர். பள்ளிவாசலுக்குப் பூட்டுப் போட முடியாமல் போய்விட்டால் பின்னர் பாகிஸ்தானைப் போன்று மினாராவை அல்லது பள்ளிவாசலின் குவிமாடத்தையாவது இடித்து விட வேண்டும் என்று எண்ணுகின்றனர். அஹ்மதிகளுக்கு மினாரா கட்டுவதற்கு அனுமதி இல்லை என்று பாகிஸ்தானின் சட்டத்தில் எங்குமே எழுதப்பட்டிருக்கவில்லை. ஆனால், அரசாங்கம் மவ்லவிகளுக்கு முன்னால், பெயர் தாங்கி ஆலிம்களுக்கு முன்னால் மண்டியிட்டு நிற்கும் நிர்பந்தத்தில் உள்ளது. எவ்வாறு இருப்பினும், எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தலாம்? என்று தங்களது முழு முயற்சியை செய்து வருகின்றனர். ஆனால், இன்ஷா அல்லாஹ் ஒரு நாள் இவர்கள் அனைவரும் சுயமே மரணித்து விடுவார்கள்.

பாகிஸ்தானில் நமக்கு திருக்குர்ஆன் வெளியீட்டிற்கு தடை உள்ளது. மொழியாக்கம் செய்து வெளியிடுவதற்கான கேள்விக்கே இடமில்லை. நாஸிரா (திருக்குர்ஆன் மூலத்தை மட்டும்)வெளியிடுவது கூட அவர்களின் பார்வையில் மன்னிக்கப்பட முடியாத குற்றம் ஆகும். இன்னும்கூறப்போனால், சில மக்களின் மீது அதன் காரணமாக மட்டுமே கடுமையும் காட்டப்பட்டுள்ளது. நீங்கள் திருக்குர்ஆனை ஏன் கேட்கின்றீர்கள்? ; நீங்கள் ஏன் ஒலிப்பதிவை ஒலிக்கச் செய்து கொண்டிருந்தீர்கள்? என்று வழக்குகள் பதியப்பட்டுள்ளன. தற்போது இது பெயர் தாங்கி முஸ்லிம்களின் இஸ்லாம் ஆகும். முல்லாக்கள் மார்க்கத்தை சீர் கெடுத்து வைத்துள்ளனர். அதற்கெதிரில் அல்லாஹ் நமக்கு எவ்வாறு வழியைத் திறக்கின்றான்? நாம் உலகின் பல்வேறு நாடுகளில் திருக்குர்ஆன் வெளியீட்டுப் பணியை செய்து கொண்டிருக்கின்றோம். நமது திருக்குர்ஆன் எல்லா இடத்திலும் விரும்பப்படுகின்றது! குறிப்பாக எந்த மொழியில் மொழியாக்கம் வெளியிடப்பட்டாலும் அது மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது!

தன்ஸானியாவின் தாருஸ் ஸலாம் பகுதியின் ஒரு முஅல்லிம் ஸாஹிப் கூறினார்.

அவர் ஒரு பகுதியில் பிரசுரங்களை விநியோகம் செய்வதற்காக சென்றார். ஜமாஅத்து நூல்களையும் விற்பனை செய்கின்றார். இதன் மூலம் தப்ஃலீக் தொடர்புகளும் அதிகரிக்கின்றன.

கூறுகின்றார்: நான் ஸவாஹிலீ மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட திருக்குர்ஆனை வாங்க விரும்புகின்றேன் என்று ஒரு நாள் எனக்கு 30 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து ஜமாஅத் அல்லாத ஒரு நபரின் தொலைபேசி அழைப்பு வந்தது. திருக்குர்ஆன் உங்களுக்கு அருகில் இருக்கும் பகுதிகளிலேயே கிடைக்குமே என்று முஅல்லிம் ஸாஹிப் அவரிடம் கூறினார். ஆனால், எனக்கு ஜமாஅத்தின் மொழியாக்கம் மற்றும் தஃப்ஸீருடைய வழிமுறை மிகவும் பிடித்திருக்கின்றது என்று அவர் கூறினார். மற்றவர்களும் மொழியாக்கம் செய்துள்ளனர் என்பது சரிதான்! ஆனால், ஜமாஅத்தின் மொழியாக்க வழிமுறையே எனக்கு மிகவும் பிடித்துள்ளது. ஏனெனில், அறிவு அதனை ஏற்கின்றது. நான் இந்த மொழியாக்கத்தையே வாங்க விரும்புகின்றேன்.

மாலியில் முபல்லிஃக் பிலால் ஸாஹிப் இருக்கின்றார். கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு திருக்குர்ஆன் கண்காட்சி நடத்துவதற்கு நற்பேறு கிடைத்தது. ஒரு மாணவர் அரங்கிற்கு வந்தார். அவருக்கு ஃபிரஞ்ச் மொழியாக்கத்தின் திருக்குர்ஆனைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தற்போதைய ஃபிரஞ்ச் மொழியாக்கங்களில் ஜமாத்தின் ஃபிரஞ்ச் மொழியாக்கம் எல்லாவற்றையும் விட சிறப்பானது ஆகும் என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது எங்களது வீட்டிலும் திருக்குர்ஆன் மொழியாக்கம் உள்ளது; அது ஜமாஅத்தின் மொழியாக்கத்தை விட மிகச் சிறந்தது ஆகும் என்று அந்த இளைஞர் கூறினார்.

எவ்வாறு இருப்பினும், அவர் தமது வீட்டிற்குச் சென்றார். மேலும், அங்கிருந்து திருக்குர்ஆனை எடுத்துக் கொண்டு வந்தார். மேலும், அஹ்மதி அல்லாதவர்களுடைய மொழியாக்கம் மிகச் சிறந்தது என்று கூறுவதற்காக ஒரு மணிநேரத்திற்கும் கூடுதலான நேரத்தை செலவிட்டார். இரண்டு மொழியாக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எவ்வாறு இருப்பினும், அவருடைய இயல்பு நீதியை விரும்பக் கூடியதாக இருந்தது. ஜமாஅத்தின் மொழியாக்கம் மிகச் சிறந்தது என்று கூறும் நிர்பந்தத்திற்கு ஆளாகிவிட்டார். உண்மையில் இதன் மூலம் திருக்குர்ஆனை புரிவது மிகவும் எளிதாக உள்ளது என்றும் அவர் கூறினார். பின்னர், அவர் திருக்குர்ஆனின் ஒரு பிரதியை வாங்கிக் கொண்டு சென்று விட்டார்.

இஸ்லாத்தின் உண்மையான போதனைகளும், அல்லாஹ்வின் மீதான ஈமானும் ஜமாஅத்தின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களின் மூலமாக எவ்வாறு முஸ்லிம்களிடம் நிலைபெற்றுள்ளது? அதாவது நல்லியல்பு படைத்த முஸ்லிம்கள் எவ்வாறு அந்த தாக்கத்தை பெறுகின்றனர்? (இது தொடர்பான ஒரு சம்பவத்தை நான் எடுத்துரைக்கின்றேன்).

ஜோராட் புத்தகக் கண்காட்சி சந்தர்ப்பத்தின்போது ஜோலிமோஸ் ஸாஹிப் என்ற ஒரு நண்பர் வந்தார். அவர் கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆவார். ஸ்டாலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படம் மற்றும் ஜமாஅத்தினுடைய புத்தகங்களை பார்வையிடத் துவங்கினார். இன்று நான் முஸ்லிமாக உங்கள் முன் நிற்கின்றேன் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் காரணமாக மட்டுமே ஆகும்; இது ஜமாஅத் என் மீது செய்த பெரும் கருணையாகும் என்று சிறிது நேரத்திற்குப் பிறகு டியூட்டியில் இருந்த முபல்லிஃக் ஸாஹிபிடம் கண் கலங்கியவாறு அவர் கூறினார்.நீங்கள் அஹ்மதியா? ஜமாஅத் உங்கள் மீது என்ன கருணை செய்தது? என்று அவரிடம் கேட்கப்பட்டது. அப்போது, நான் அஹ்மதி ஒன்றும் இல்லை ; ஆயினும் நான் மார்க்கத்திலிருந்து விலகி, விலகி நாத்திகவாதி ஆகிவிட்டேன். ஆனால், எனது தந்தையிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய சில பழைய நூல்கள் இருந்தன. அவை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் எழுதிய புத்தகங்கள் ஆகும். அந்தப் புத்தகங்களை நான் படித்தேன். அந்த நூல்களில் ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் அவர்கள் இறைவனைப் பற்றி எடுத்து வைத்திருந்த அந்த ஆதாரங்கள் எனது கண்களை திறந்து விட்டன. நான் பதிலற்றவனாக ஆகிவிட்டேன். இஸ்லாத்திற்கு ஆதரவாக அஹ்மதிய்யா ஜமாஅத் முன் வைக்கின்ற ஆதாரங்களின் மூலமாக எனது ஈமான் உறுதியடைகின்றது. மேலும், எனது அறிவும் பெருகுகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் காரணமாக இன்று நான் முஸ்லிமாக இருக்கின்றேன்.

மேற்கத்திய உலகில் சில நாடுகளில் உதாரணமாக ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகளில் திருக்குர்ஆனிற்கு அவமரியாதை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் இஸ்லாத்தின் அழகிய போதனை முன் வைக்கப்படும்போது அதே எதிர்பாளர்களின் நடவடிக்கை மாறிவிடுகின்றது. எனவே இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே திருக்குர்ஆனின் அந்தஸ்து மற்றும் மேன்மையை உயர்த்துவதற்காகவும், அதன் உண்மையான போதனையை உலகிற்கு எடுத்துரைப்பதற்காகவும் முயன்று வருகின்றது.

ஒரு ஜெர்மன் பெண்மணி கூறினார்: ஜமாஅத்தின் நூல்கள் மற்றும் திருக்குர்ஆனின் கண்காட்சி நடத்தப்பட்டது. அந்த கண்காட்சியில் இஸ்லாம் தொடர்பாக பல்வேறு தலைப்புகளில் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் சான்றுகள் வைக்கப்பட்டிருந்தன. இஸ்லாம் ஒன்றும் தீவிரவாதத்தை விரும்புகின்ற மார்க்கம் இல்லை என்பதை அந்த தலைப்புகள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

அந்தப் பெண்மணி கூறினார்: உங்களுடைய ஜமாஅத் இஸ்லாத்தை எளிமைப்படுத்தி எங்களுக்கு முன் வைத்து விட்டது. இஸ்லாத்தை எதிர்ப்பதற்கும், திருக்குர்ஆனை எதிர்ப்பதற்கும் தற்போது எந்தக் காரணமும் இல்லை.

திருக்குர்ஆன் வெளியீடு மற்றும் இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றிய நூல்கள் மக்கள் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? இது தொடர்பாக மேலும் சில சம்பவங்களை நான் எடுத்துரைக்கின்றேன். கோலாட் புத்தகக் கண்காட்சி தொடர்பாக அறிக்கை கொடுக்கக் கூடியவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு முஸ்லிம் பேராசிரியர் ஷபானா யாஸ்மீன் ஸாஹிபா அவர்கள் நமது புத்தக அரங்கை பார்த்தபோது மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், வந்த உடனேயே திருக்குர்ஆனின் அஸாமி மொழியாக்கத்தை எடுத்தார்கள்.

அஸாம் மாநிலத்தில் இந்த புத்தகக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மேலும் தமது சக பேராசிரியரிடம் இவ்வாறு கூறினார்கள்: இன்று எனது ஒரு கனவு நிறைவேறிவிட்டது. நான் ஒரு நீண்ட காலமாக அஸாமி மொழியாக்க திருக்குர்ஆனை தேடிக் கொண்டிருந்தேன். எனது ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் என்னிடம் மீண்டும், மீண்டும் திருக்குர்ஆனின் அஸாமி மொழி பிரதியை கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால், என்னிடத்தில் இந்த மொழியாக்கம் இல்லாததன் காரணமாக என்னால் அவருக்கு திருக்குர்ஆனை கொடுக்க முடியவில்லை. அதன் காரணமாக எனக்கு மிகுந்த வெட்கம் இருந்தது. மேலும், நான் முஸ்லிமாக இருப்பதில் எனக்கு வேதனை ஏற்பட்டது. எனது ஆசிரியரின் மரணத்திற்குப் பிறகு இன்று எனக்கு இந்த திருக்குர்ஆன் கிடைத்துள்ளது. இதன் விலை ஆயிரம் ரூபாய் இருந்தாலும் நான் தற்போது அதனை நிச்சயமாக வாங்கியிருப்பேன்.

இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும். அதாவது முஸ்லிம்களிடத்தில் திருக்குர்ஆன் மற்றும் ஏனைய அடிப்படை இஸ்லாமிய நூல்களும் கூட இல்லாத இது போன்ற தொலைதூரப் பகுதிகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் புக் ஸ்டாலை நடத்தி அவர்களின் மார்க்க மற்றும் ஆன்மிக தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது.

அடுத்து, தீமாஜி புத்தகக் கண்காட்சியில், சிவன் கோவில் கட்டிக் கொண்டிருக்கின்ற மற்றும் அதற்காக பிரச்சாரம் செய்து வருகின்ற பன்டி தோவராஸ் போகாகோஹைஆன் என்ற பெண்மணி வருகை தந்தார். முஸ்லிம்களின் மக்கள் தொகை மிகவும் குறைவாக இருக்கின்ற இந்தப் பகுதியில் ஒரு இஸ்லாமிய புத்தக அரங்கம் உள்ளதா? என்று நமது புத்தக அரங்கை அவர் பார்த்தபோது மிகவும் ஆச்சரியமடைந்தார். அவர் நமது புத்தக அரங்கிற்கு வந்து உரையாடினார். மிகவும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார். அவர் திருக்குர்ஆனை விலைக்கு வாங்கியவாறு இந்த விஷயத்தை வெளிப்படுத்தினார். அதாவது, எனது வாழ்க்கையின் ஒரு கனவு இன்று நிறைவேறி விட்டது. திருக்குர்ஆனை வாங்கினார்; மேலும் அதனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். மேலும் அதனுடன் நிழற்படமும் எடுத்துக் கொண்டார்.

செக் ரிபப்ளிக் என்பது ஒரு கிழக்கு ஐரோப்பிய நாடு ஆகும். முபல்லிஃக் ஸாஹிப் கூறுகின்றார்: ஓர் இளைஞர் நமது புத்தக அரங்கிற்கு வந்தார். அவர் கூறினார்: இறைவன் இருக்கின்றான் என்ற முடிவிற்கு நான் வந்துள்ளேன். ஆனால், எந்த மார்க்கம் என்னை இறைவனை சென்றடைய செய்யும் என்பது எனக்கு புரியாமல் இருந்து வந்தது. நான் வெகு காலமாக ஏராளமான மார்க்கங்களை முழுமையாக ஆய்வு செய்துள்ளேன். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் அனைத்து விவகாரங்களுக்கும் தீர்வு வழங்குகின்றது என்ற முடிவிற்கு தற்போது நான் வந்துள்ளேன். இதன் மூலம் எனது உள்ளத்திற்கும், எண்ணத்திற்கும் ஆறுதல் ஏற்படுகின்றது. என்னால் இங்கு ஆன்மிகத்தை உணர முடிகின்றது.

திருக்குர்ஆனின் போதனையை

மக்களின் உள்ளங்கள் மற்றும் மூளை வரை யார் கொண்டு சேர்க்கின்றார்? என்பதை தற்போது இந்த முல்லாக்கள் கூறட்டும்!

அல்லாஹ் எவ்வாறு தப்லீஃக்கின் வழிகளைத் திறப்பதற்கான ஏற்பாட்டை செய்கின்றான்? இது தொடர்பாகவும் ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் உள்ளன. பாகிஸ்தானில் நமக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் சில தடைகளுக்கு மத்தியிலும் அல்லாஹ் எளிமையை ஏற்படுத்தி விடுகின்றான்.

கினிபஸாவ் நாட்டின் முபல்லிஃக் எழுதுகின்றார்: கடந்த டிசம்பர் மாதத்தில் கேப்வர்ட் ஜலேண்டிற்கு நான் சுற்றுப் பயணம் சென்றிருந்தேன். அந்த சுற்றுப் பயணத்தின்போது நமது ஜமாஅத்தினுடைய ரேடியோ நிகழ்ச்சி இருக்க வேண்டும் என்ற தேவையை கடுமையாக நான் உணர்ந்தேன். ஆயினும், நிறைய முயற்சிகளுக்கு மத்தியிலும் ஜமாஅத் அங்கு பதிவு செய்யப்படாமல் இருந்தது; அதன் காரணமாக ரேடியோ நிகழ்ச்சி நமக்கு கிடைக்க முடியாமல் இருந்து வந்தது. கூறுகின்றார்கள்: சுற்றுப் பயணம் முடிவடைந்த பிறகு, கினிபஸாவிலிருந்து ஏராளமான பிரசுரங்கள் அச்சிடப்பட்டு கேப்வர்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அங்கு அவை அதிகமாக விநியோகம் செய்யப்பட்டன. மேலும் கூறுகின்றார்கள்: ஒரு நண்பர் பிரசுரத்தைப் படித்த பிறகு ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸிற்கு தொலைபேசியில் அழைத்தார். மேலும், நான் ஜமாஅத்தைக் குறித்து விஷயங்களை அறிய விரும்புகின்றேன் என்று அவர் கூறினார். இவ்வாறு அவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவருக்கு ஜமாஅத்தைக் குறித்து கூறப்பட்டது. நீங்கள் உங்களது நிகழ்ச்சிகளை ரேடியோவில் ஏன் ஒலிபரப்புவதில்லை? என்று அவர் கேட்டார். அதற்கு, நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால், ரேடியோ நமக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது, எனது வானொலி நிலையம் உள்ளது; நான் வானொலி நிலையத்தின் இயக்குனர் ஆவேன்; நீங்கள் எனது வானொலி நிலையத்தில் நிகழ்ச்சிகள் செய்யுங்கள்; அதன் மூலம் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் என்று அவர் கூறினார். இவ்வாறு அல்லாஹ் ஒரு புதிய வழியை திறந்து கொடுத்துவிட்டான்.

அடுத்து, மாலி நாட்டின் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஜல்ஸா ஸாலானாவில் கோலி கோரூ மண்டலத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தின் அஹ்மத் தவ்ரே என்ற ஒரு நண்பர் வந்தார். தற்போது மாலியில் ஒரு பிரிவு உள்ளது. அந்தப் பிரிவு தொழுகை மற்றும் இஸ்லாமியக் கட்டளைகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

தற்போது பாருங்கள்! தொழுகை மற்றும் இதர இஸ்லாமிய கட்டளைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத இந்தப் பிரிவினர் கூட (அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் பார்வையில்) முஸ்லிம்கள் ஆவர். ஆனால், அஹ்மதிகள் முஸ்லிம்கள் இல்லை (என்பதே அவர்களின் நிலைபாடு).

அவர் அதே பிரிவின் உறுப்பினர் ஆவார். ஆனால் அவரது உள்ளம் நிம்மதியாக இருக்கவில்லை. நல்லியல்பு படைத்தவராக இருந்தார்.

அந்த நபர் கூறுகின்றார்: இஸ்லாமிய கட்டளைகளுக்கு எந்த அவசியமும் இல்லை ; ஈமான் கொள்வதற்கும் அவசியம் இல்லை ;தொழுவதற்கும் அவசியம் இல்லை என்றே நிச்சயமாக நாங்கள் கூறி வந்தோம்; ஆனால் எனது உள்ளம் அதில் மனநிறைவு பெறவில்லை.

ஒருநாள் அவர் ரேடியோ கேட்டார். அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வானொலி நிலையம் ஆகும். அதில் தொழுவதற்கான வழிமுறை கற்றுக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை அவர் மிகவும் கவனமாகக் கேட்டார். அதன் பின்னர் மீண்டும், மீண்டும் ஜமாஅத்தினுடைய வானொலி நிகழ்ச்சியை கேட்கத் துவங்கினார். எனவே இந்த மக்களே உண்மையான முஸ்லிம்கள் என்று உள்ளத்தில் உறுதி ஏற்பட்டு விட்டது. ஆனால், (அஹ்மதிகளாகிய) இவர்களை அனைத்து ஆலிம்களும் இஸ்லாத்திலிருந்து வெளியேற்றி விட்டனர் என்று கிராமவாசிகள் கூறினர்.

அவர் கூறுகின்றார்: நான் இங்கு மக்கள் (ஐவேளை தொழுகையை) தொழுது வந்ததுடன் தஹஜ்ஜுத் தொழுதலையும் பார்த்தபோது எனது உள்ளம் (முற்றிலும்) மனஅமைதி பெற்று விட்டது. நான் மார்க்க விவகாரங்களை அதிகமாக அறிந்திருக்கவில்லை. ஆனால், நான் இஸ்லாத்தைக் குறித்து அறிந்திருந்த வரை எனது கண்களுக்கு முன்னால் பார்த்து விட்டேன். மேலும், அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டேன்.

இறுதி வேதமான திருக்குர்ஆனை படிப்பதற்கும், கேட்பதற்கும் நான் கூறியதுபோன்று பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மாபெரும் குற்றம் ஆகும். ஆனால், அதே வேதத்தின் மூலமாகவே அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து வருகின்றது. மேலும், உலகை சீர்திருத்தி வருகின்றது.

மைக்ரோநேஷியாவின் முபல்லிஃக் ஷர்ஜீல் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

சில காலம் முன்னர் ஸைமன் கைடன் என்ற ஒரு நபர் தொடர்பு கொண்டு திருக்குர்ஆன் பிரதி ஒன்றை வாங்கினார். அதன் பிறகு சிறிது காலம் கழிந்திருந்தது. நான் சந்திக்க விரும்புகின்றேன் என்று ஒரு நாள் திடீரென அவரது மெஸேஜ் வந்தது. மஸ்ஜிதிற்கு வந்தவுடன் அவர் கூறினார்: நான் வாழ்நாள் முழுவதும் பைபுளை மிகவும் விரிவாக படித்துள்ளேன். ஆனால், முயற்சி செய்த பிறகும் எதுவும் புரியவில்லை. அதன் போதனை உள்ளத்தில் இடம் பெறுவதில்லை. ஆனால், திருக்குர்ஆனை நான் படிக்கத் துவங்கியது முதல் அதன் ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தில் நேராக நுழைவதைப் போன்று எனக்கு தோன்றியது. தான் வாழ்நாள் முழுவதும் தவறிழைத்து கொண்டிருந்ததும், தான் திருக்குர்ஆனின் போதனையிலிருந்து இழப்பிற்குரியவனாக இருந்ததும் எப்படி சாத்தியமானது! என்று அவர் மிகவும் ஆச்சரியமடைந்தார். அதன் பிறகு தனது தாயாரிடம் சென்றார். மேலும், நான் மஸ்ஜிதிற்கு செல்கிறேன்; மேலும் நான் இஸ்லாத்தில் இணைய இருக்கின்றேன் என்று அவர் தனது தாயாரிடம் கூறினார். அவருடைய உறவினர்களும் அங்கே இருந்தார்கள். நீ பெரும் தவறு செய்கின்றாய் என்று அவர்கள் கூறினர். மேலும் அவரை ஏசி பேசினர். அப்போது, நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்களோ செய்து கொள்ளுங்கள். ஆனால் நான் எனது உள்ளத்தால் முஸ்லிமாகி விட்டேன் என்று அவர் கூறினர். மேலும், கூறுகின்றார்கள்: ஸைமன் ஸாஹிப் இந்த விஷயத்தை என்னிடம் கூறியபோது அவரின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. தற்போது அவர் ஜமாஅத்தில் இணைய மட்டும் செய்யவில்லை. மாறாக, மிகவும் துணிவுடன் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக எவ்வாறு உலகின் பல்வேறு நாடுகளில் நல்ல ஆன்மாக்கள் இஸ்லாத்தில் இணைகின்றன? (என்று பார்ப்போம்).

ஸ்பெய்ன் அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஃபிரான்ஸிஸ்கோகீஸோஸ் ஸாஹிப் என்ற ஒரு ஸ்பேனிஷ் நண்பர் நீண்ட காலம் ஆய்வு செய்து 2023-ல் முஸ்லிம் ஆனார்கள். இஸ்லாத்தை உண்மையான மார்க்கம் என்று நம்பி வந்தார்கள். ஆனால், முஸ்லிம்களின் பிளவுபட்ட நிலையைக் கண்டு கவலை கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் காலகட்டத்திற்குப் பிறகு முஸ்லிம்களால் ஒன்றுபட முடியவில்லை. இனி கிலாஃபத் அமைப்பின் கீழ் மட்டுமே ஒன்றுபட முடியும் என்று கருதி வந்தார். அவர் இஸ்லாமிய வரலாறை எங்கோ படித்திருந்தார். ஆனால் கிலாஃபத் அமைப்பை எங்கு சென்று தேடுவது? என எண்ணினார்.

எவ்வாறு இருப்பினும், 2023-ல் அவருக்கு தாரிக் ஸாஹிப் என்ற நமது ஓர் அஹ்மதியுடன் தொடர்பு ஏற்பட்டது. அஹ்மதிய்யத்தைக் குறித்து ஆய்வு செய்யும் படி அவருக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

ஆக, அவர் மூன்று மாதம் அஹ்மதிய்யத்தைக் குறித்து ஆய்வு செய்தார். மேலும், உள்ளம் தெளிவான பிறகு அவர் பைஅத் செய்துவிட்டார். மேலும், முறையாக ஜூமுஆ போன்ற விஷயங்களிலும் வருகை தருகின்றார்.

தாஜிகிஸ்தானைச் சேர்ந்த கரூமூஃப் துஸ்குன் என்ற ஒரு நண்பர் இருக்கின்றார். இன்றைய நாட்களில் கஸ்கீஸ்தானில் வசித்து வருகின்றார். கூறுகின்றார்: நான் இங்கு ஷுகர் என்ற இடத்தில் பணி செய்து வருகின்றேன். அங்கு அஹ்மதி சகோதரர்களும் இருக்கின்றனர். அவர் சிலருடைய பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.நான் அவருடன் சுமார் மூன்று வருடங்கள் ஜமாஅத்தைக் குறித்து பேசியுள்ளேன். அஹ்மதிய்யா ஜமாத்துதான் உண்மையான இஸ்லாம் ஆகும்; மேலும், இமாம் மஹ்தி (அலை) அவர்களே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்கள்; மேலும் ஈஸா மஸீஹ் மரணித்து விட்டார்கள் என்று அவரிடம் பேசிய பிறகு இறுதியில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

ஆக, பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள். பின்னர், அல்லாஹ் எனக்கு சேவை செய்வதற்கு நற்பேறு வழங்குவதற்காகவும், நான் இறையச்சமுடையவராக ஆகுவதற்காகவும் பைஅத்தின் பத்து நிபந்தனைகளின்படி அமல் செய்வதற்கு நற்பேறு வழங்குவதற்காகவும் துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

அடுத்து, ரஷ்யாவிலிருந்து முபல்லிஃக் அதாவுல் வாஹித் ஸாஹிப் கூறுகின்றார் : ஓர்

இளைஞருக்கு அல்லாஹ் இஸ்லாம், அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனத்தை ஏற்படுத்தினான். ஒன்றரை வருடத்திற்கு முன்னர் அவருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர் ஒரு சிறிய ஊரில் வசிக்கக் கூடிய இளைஞர் ஆவார். அவருடைய தந்தையார் மார்க்கத்திலிருந்து விலகிச் சென்றிருந்தார். ஆனால், மார்ஸீலின் மனைவிக்கு ஆர்தோடெக்ஸ் கிறிஸ்தவத்துடன் தொடர்பு இருந்தது. எனவே, மார்ஸீல் என்பவர் இளைஞர் ஆவார். அவருடைய மூத்த சகோதரர் கிறிஸ்தவர் ஆவார். ஆனால், அவருடைய கவனம் அவருடைய தந்தையின் சமுதாயத்தின் காரணமாக இஸ்லாத்தின் பக்கம் ஏற்பட்டது. ஆனால் சுன்னத் ஜமாஅத் என்ற பிரிவின் இஸ்லாத்தை அவர் ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால், அவர் கூறுகின்றார்: இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகும் கூட இஸ்லாத்தைக் குறித்து ஏராளமான கேள்விகள் மனதில் இருந்தன. அவற்றிற்கு உள்ளூர் மவ்லவி மனநிறைவான பதில் அளிக்க முடியாமல் இருந்தார். இந்த நிம்மதியற்ற நிலை அதிகரித்துக் கொண்டே வந்தது. இதற்கிடையில் அல்லாஹ் இன்டர்நெட் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத் ரஷ்யாவுடன் தொடர்பை ஏற்படுத்தி விட்டான். பின்னர் அங்கு மார்ஸீல் ஸாஹிபிற்கு தமது கேள்விகளுக்கு மன நிறைவான பதில் கிடைத்துக் கொண்டிருந்தது. அவர் கூறுகின்றார்: நான் ஏராளமான இடங்களில் இஸ்லாத்தை புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்தேன். ஆனால், உண்மையான இஸ்லாத்தை நான் அஹ்மதிய்யத்தில் தான் கண்டேன். ஆக, அவர் பைஅத் செய்து விட்டார். ஃபிலிபைன் நாட்டின் முபல்லிஃக் இன்சார்ஜ் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: இங்கு ஒரு தீவில் 139 பைஅத்துகள் நடைபெற்றன. மேலும், பைஅத் செய்யக் கூடியவர்களில் ஒரு பள்ளி முதல்வரும், இரண்டு இமாம்களும் அடங்குவர். மேலும், நான்கு மஸ்ஜித் இமாம்கள் பைஅத் செய்து அஹ்மதிகளாகிவிட்டனர்.

ஒரு மஸ்ஜிதின் இமாமான ஹாஜி ஈஸா ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் எந்த மஸ்ஜிதிற்கு இமாமா இருந்தேனோ தற்போது அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மஸ்ஜிதாகவே உள்ளது. ஒரு நண்பர் மஸ்ஜிதுடன் இணைந்திருந்த நிலத்தின் சில பகுதியை ஜமாஅத்திற்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டார். நிரந்தரமாக முஅல்லிம் ஒருவரை அங்கு பணியமர்த்துவதற்கு ஏதுவாக அந்த இடத்தில் நடப்பு வருடத்தில் மிஷன் ஹவுஸ் கட்டுவதற்கான எண்ணம் உள்ளது. இந்த இமாம் பணம் பெறுபவராக மட்டுமல்லாமல் பொருள் தியாகம் செய்யக் கூடியவராகவும் இருக்கின்றார். அவருக்கு சொந்தமான கடை உள்ளது. வியாபாரம் உள்ளது. பொருள் தியாகம் செய்யக் கூடியவராகவும் இருக்கின்றார். அவர் ஒருநாள் கூறினார்: நான் ஐந்நூற்றி இருபது பீஸோ (அந்நாட்டு ரூபாய் மதிப்பு) பணத்தில் ஒரு கடையை துவங்கியிருந்தேன். அல்லாஹ் எனது ஈமானை வலுவூட்டுவதற்காக அடுத்த நாளே எனக்கு எதிர்பாராத வகையில் ஒரு லட்சம் பீஸோ எங்கிருந்தோ கிடைக்கச் செய்து விட்டான். அல்லாஹ் சுயமே இவ்வாறு நற்பேறு பெற்ற மக்களுக்கு வழிகாட்டுகின்றான்.

மாலி மண்டலத்தின் ஸிகா ஸவ் பகுதியின் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மர்வான் கோலி பாலி ஸாஹிப் அஹ்மதிய்யா மிஷனிற்கு வந்தார். மேலும், தான் பைஅத் செய்ய விரும்புவதாக அவர் கூறினார். மேலும் அவர் கூறினார்: நான் அஹ்மதிய்யா ரேடியோவை மிக ஆர்வமாக கேட்டு வந்தேன். மேலும், ஜமாஅத்தின் பெரும்பாலான விஷயங்களிலிருந்து நான் மன நிறைவு பெற்றிருந்தேன். ஆனால், பைஅத் செய்வதை உள்ளம் ஏற்கவில்லை. கூறினார்: நேற்று ரேடியோ கேட்டுக் கொண்டிருக்கும் போதே எனக்கு தூக்கம் வந்து விட்டது. அப்போது நான் கனவில் இவ்வாறு கண்டேன்: அதாவது, விண்ணில் நிலவு மிகவும் ஒளிமயமாக இருக்கின்றது. மேலும், நிலவில் இரண்டு நபர்களின் சித்திரம் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு சித்திரம் பெரியது. மற்றொன்று சிறியது ஆகும். இது இமாம் மஹ்தி (அலை) மற்றும் அன்னாரின் கலீஃபாவின் சித்திரம் ஆகும்; அவர் வந்து விட்டார் என்று அருகில் பிள்ளைகள் நின்று கொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மர்வான் ஸாஹிப் கூறுகின்றார்கள்: பின்னர் நான் கனவிலேயே அருகில் நின்று கொண்டிருந்த ஒரு பெரியவரிடம், உங்களுக்கும் இந்த சித்திரம் தென்படுகின்றதா? என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெரியவர் இல்லை என்று பதிலளித்தார். கூறுகின்றார்கள்: ஆனால் இமாம் மஹ்தி வெளிப்பட்டு விட்டார் என்பதை அறிவித்துக் கொண்டிருக்கின்ற அஹ்மதிய்யத்தே உண்மையான ஜமாஅத் என்று எனது உள்ளம் மனநிறைவு அடைந்து விட்டது.

அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீஃபாக்களின் நிழற்படத்தைப் பார்த்தபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்த பெரிய நிழற்படத்தை அடையாளம் கண்டு கொண்டு விட்டார். அத்துடன் எனது நிழற்படமும் இருந்தது. அதைப் பார்த்து, இதைத் தான் நான் கனவில் கண்டிருந்தேன் என்று அவர்கள் கூறினார்கள்.

ஸ்பெய்னின் அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: கார்லூஸ் ஸாஹிப் என்பவர் இந்த வருடம் பைஅத் செய்துள்ளார். இவர் ஏற்கனவே முஸ்லிம் ஆகியிருந்தார். அப்துஸ் ஸலாம் என்று அவருக்கு பெயர் வைக்கப்பட்டிருந்தது. அவர் கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கண்டார். அமைதியின் பக்கம் வாருங்கள் என்று கனவில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கனவைப் பார்த்த பிறகு ஒருநாள் அவருடைய மனைவி இனடர்நெட்டில் அவருக்கு ஒரு விஷயத்தை காண்பித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது பார்வை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்டம மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படத்தின் மீது பட்டது. அப்போது, என்னை கனவில் அமைதியின் பக்கம் வாருங்கள் என்று கூறிக் கொண்டிருந்த நபர் இவரே ஆவார் என்று அவர் கூறினார். அதனால் அவர் அஹ்மதிய்யத்தைக் குறித்து ஆய்வு செய்யத் துவங்கிவிட்டார். மேலும், சில நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் கனவில் கண்டார். அதாவது, நான் இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் ஆவேன் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரிடம் கூறினார்கள். இந்தக் கனவிற்கு பிறகு அவரது உள்ளம் அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுவிட்டது. ஆனால், பைஅத் செய்யவில்லை. மேலும், ஆய்வைத் தொடர்ந்தார்கள். மூன்றாவது முறையாக மீண்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கண்டார். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகத்தில் கோபத்தின் அடையாளங்கள் இருந்தன. எனவே அவர் உடனடியாக ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டார். மேலும், பைஅத் செய்து விட்டார்.

எதிரிகளின் உச்சபட்ச முயற்சிகளுக்கு மத்தியிலும் புதிதாக பைஅத் செய்யக் கூடியவர்கள் எவ்வாறு உறுதியான ஈமானை வெளிப்டுத்துகின்றார்கள்!

புர்கினோஃபாஸுவின் மஹ்திஆபாதைச் சேர்ந்த நாஸிர் ஸயீத்ரூஜீகா ஸாஹிப் என்ற ஒருவர் கூறுகின்றார்கள்: எங்களது கிராமத்தின் பெரும்பாலார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தனர். அப்போது சவுதி அரேபியாவில் தங்கியிருந்த எனது ஒரு மருமகன் எல்லா செலவினங்களையும் ஏற்றுக் கொண்டு எங்களை சவுதி அரேபியாவிற்கு அழைத்தார். அங்கு சென்றடைந்தபோது, எங்களுக்கு கஅபத்துல்லாஹ்வை சுற்றிக் காட்டியவாறு இவ்வாறு கூறினார்: இது இஸ்லாத்தின் புனித ஸ்தலம் ஆகும். இஸ்லாம் இங்கிருந்துதான் பரவத் துவங்கியதே தவிர பாகிஸ்தானிலிருந்து அல்ல. எனவே இங்கு நிலைபெற்றுள்ள வஹ்ஹாபி கொள்கையை பின்பற்றுங்கள்; மேலும், அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள்.

அப்போது, இதற்காகவா நீ எங்களை இங்கு அழைத்தாய்! என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! என்று அவர் தலையை அசைத்தார். பின்னர், இந்த புனித ஸ்தலத்தின் நிழலில் நின்று கொண்டு நான் துஆ செய்கின்றேன்: எனது வாழ்வில் அஹ்மதிய்யத்தை விட்டு விலகும் எந்தவொரு சந்தர்ப்பமும் வராதிருக்கட்டுமாக! என்று நான் கூறினேன். எவ்வாறு இருப்பினும் அவர் கூறுகின்றார்: அதன் பிறகு நான் விரைவாக புர்கினாஃபாஸுவிற்கு வந்துவிட்டேன்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

இறைவனின் செயல் எவ்வாறு வெளிப்பட்டது என்றால், அவருடைய அதே மருமகன் தமது உறவினர்களையும், அன்பர்களையும் சந்திப்பதற்காக பார்கினாஃபாஸ்ஃவிற்கு வந்தபோது அவருக்கு அல்ஹாஜ் இப்ராஹீம் ஸாஹிப் தப்லீஃக் செய்தார்கள். மேலும், அவர் அஹ்மதியாகிவிட்டார். எவ்வாறு இருப்பினும் கூறுகின்றார்கள்: எவர் நம்மை வேட்டையாட விரும்பினாரோ அவர் சுயமே அஹ்மதியத்திற்கு இரையாகிவிட்டார்.

பின்னர் எதிர்ப்பிலும் உறுதிப்பாட்டுடன் இருப்பது தொடர்பான பார்கினாஃபாஸ்ஃவைப் பற்றியே அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: டோரீ மண்டலத்தின் முஅல்லிம் உமர் டீகோ ஸாஹிப் ஆவார். அவர் கூறுகின்றார்: ஒருமுறை வஹ்ஹாபி முல்லாக்களின் ஒரு கூட்டம் அவருடைய வீட்டிற்கு வந்தது. மேலும், அஹ்மதியத்தை விட்டு விலகும்படி கூறியது. இல்லையென்றால் உம்மை கொன்று விடுவோம் என்று அவர்கள் மிரட்டல் விடுத்தனர்.

உமர் டீகோ ஸாஹிப் கூறினார்: என்னை கொன்று விடுங்கள்; ஆனால், அஹ்மதிய்யத்தை விட்டு விடுவதற்கான கேள்விக்கே இடமில்லை. மேலும், தப்லீஃக் செய்வதிலிருந்தும் நான் விலக மாட்டேன். அதனால் கடுமையான கோபத்துடன் அவர்கள் சென்றுவிட்டனர். அடுத்த நாள் ஆயுதம் ஏந்திய சில மக்கள் அவருடைய வீட்டிற்கு வந்தனர். அதனால், நீங்கள் டோரீக்கு சென்று விடுங்கள் என்று அவருக்கு சில அஹ்மதி சகோதரர்கள் ஆலோசனை வழங்கினர். அந்த நாள் இரவு முஅல்லிம் ஸாஹிப் தமது குடும்பத்தினருடன் துஆவில் மும்முரமாக ஈடுபட்டார். மேலும், அல்லாஹ்விடம் வழிகாட்டல் வேண்டினார். முஅல்லிம் ஸாஹிப் கனவில் இஸ்மாயீல் என்ற பெயருடைய ஒரு நபரைக் கண்டார்கள். அவர் கூறினார்: உமரே! நீ எங்கே செல்கின்றாய்? அதற்கு டோரீ என்று முஅல்லிம் ஸாஹிப் பதில் அளித்தார். அப்போது சரி! என்று அவர் கூறினார்.

ஆக, கனவிற்கு அடுத்த நாள் காலை அன்னார் ஹிஜ்ரத் செய்து விட்டார்கள். மேலும் அவரை ஒரு ரிக்ஷா வண்டிக்காரர் பாதுகாப்பான வழிமுறையில் அங்கு கொண்டு சேர்த்து விட்டார். மேலும், டோரீ என்ற இடத்தை அடைந்ததும் கூறுகின்றார்: ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகள் வந்தனர்; மேலும் உங்களை தேடிக் கொண்டிருக்கின்றனர் என்று அவருடைய மனைவியின் தொலைபேசி அழைப்பு வந்தது. இவ்வாறு அல்லாஹ் அவருடைய உயிரை காப்பாற்றி விட்டான்.

நைஜீரியாவின் ஓவ்ஸன் மாநிலத்தின் ஒரு கிராமத்தில் வசித்து வரும் பத்ர் அதேர்மீ ஸாஹிப் என்பவருக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு கிடைத்தது. அவர் விவசாயம் செய்யக் கூடியவர் ஆவார். அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னர் அவர் அந்த கிராமத்தின் எதிரி கூட்டத்தில் அதாவது நமது ஜமாஅத்தை எதிர்க்கக் கூடிய அந்த கிராமத்தில் இருந்த கூட்டத்தில் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார்.

கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிஷினரி எனக்கு ஜமாஅத்தைக் குறித்து அறிமுகம் செய்து வைத்தார். எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து மேலும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. சில காலம் ஆய்வு செய்த பிறகு நான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டேன். பைஅத்திற்கு பிறகு கிராமவாசிகளின் புறமிருந்து கடுமையான எதிர்ப்பை எனக்கு எதிர் கொள்ள நேரிட்டது. கூறுகின்றார்: மூன்று மாதங்கள் தருகின்றோம்; அதற்குள் நீ அஹ்மதிய்யத்தை விட்டு விடவில்லையென்றால் பின்னர் உமது வீட்டை அழித்து விடுவோம் என்று என்னிடம் கூறப்பட்டது. பெரும் கவலை ஏற்பட்டது. ஒருநாள் நான் பணி செய்வதற்காக வயலுக்குச் சென்றேன். கடுமையான புயல் வந்துவிட்டது. கூறுகின்றார்கள்: நான் வீட்டுக்கு திரும்பிச் செல்லும் போது எனது வீட்டை புயல் சூறையாடியிருக்கும் என்று நான் நம்பியிருந்தேன். எவ்வாறு இருப்பினும், நான் வீட்டிற்கு சென்றபோது நான் கண்ட காட்சி என்னவென்றால், எனது வீட்டின் வலப்புறம் மற்றும் இடப்புறம் இருந்த அனைத்து வீடுகளும் அழிந்து நாசமாகிவிட்டன. சுமார் 25 வீடுகள் அழிந்துவிட்டன. வீட்டின் கூரை மட்டும் அல்ல மாறாக, முழு வீடுமே இடிந்து விழுந்து விட்டது. இதற்கிடையில், அந்த எதிரிகளின் இந்தக் கூற்று நினைவிற்கு வந்தது. அதாவது, நீர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டீர்; எனவே ஒரு நாள் திரும்பி வந்து பார்க்கும்போது உமது வீடு அழிந்து நாசமாகியிருப்பதை நீர் காண்பீர் என்று எதிரிகள் கூறியிருந்தனர். நான் துஆ செய்தேன்:அல்லாஹ்வே! இந்த ஜமாஅத் உன்னுடைய ஜமாஅத் என்றால், மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியைக் குறித்து நற்செய்தி வழங்கியிருந்தார்களோ அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களே என்றால் பின்னர் எனது வீட்டை இடிந்து விழாமல் இருக்கச் செய்வாயாக. எவ்வாறு இருப்பினும், மழை நின்று விட்ட பிறகு நான் எனது வீட்டிற்குள் நுழைந்தேன். எல்லா அறைகளும் பாதுகாப்பாக இருந்ததையும், எந்தவொரு சேதமும் ஏற்படாமல் இருந்ததையும் நான் கண்டேன். அதேநேரம் அக்கம் பக்கத்தில் இருந்த அனைத்து வீடுகளும் இடிந்து விழுந்து நாசமாகியிருந்தன. கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்திற்குப் பிறகு அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவத்தின் மீதான எனது ஈமான் உறுதியாகிவிட்டது. மேலும், இந்த ஜமாஅத் இறை ஜமாஅத் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது.

எவ்வாறு இருப்பினும், உலகின் பல்வேறு நாடுகளில் அல்லாஹ்வின் இந்த நடைமுறை உள்ளது. அதாவது அல்லாஹ்வின் ஆதரவு எல்லா இடங்களிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இருப்பது தென்படுகின்றது. அன்னார் (அலை) நமக்கு உண்மையான இஸ்லாமிய போதனையை வழங்கினார்கள். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மைக்கு மிகப் பெரிய சான்று ஆகும். இந்த சம்பவங்களும், இந்த விஷயங்களும் அல்லாஹ்வின் அருளினால் மக்களின் ஈமானை வலுப் பெறச் செய்து வருகின்றன. அல்லாஹ் உலகத்தினரின் கண்களையும் திறப்பானாக. மேலும் அவர்களுக்கு ஈமானுடனும், உறுதியுடனும் ஒப்புக் கொள்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன். சில ஜனாஸாக்கள் உள்ளன. அவற்றைக் குறித்து எடுத்துரைப்பேன். ஆனால், இந்த இடத்தில் ஒன்றை கூறிவிடுகின்றேன். அதாவது, இன்றைய நாட்களில் கோவிட் மீண்டும் பரவி வருகின்றது. எனவே மக்களும் இது தொடர்பாக முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மர்ஹூம்களின் நற்குறிப்பில், முதலாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய பீர் ஸியாவுத்தீன் ஸாஹிப் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய அமத்துல் ஹாதி ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களுடைய மகள் ஆவார்கள்.92 வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் மகன்களான பீர் ஷபீர் அஹ்மத் அவர்கள் இஸ்லாமாபாதின் நாயிப் அமீர் ஆவார்கள். மேலும், பிரிகேடியர் துபைர் அஹ்மத் இன்றைய நாட்களில் ஃபஸ்லே உமர் மருத்துவ மனையின் அட்மினிஸ்ட்ரேட்டர் ஆவார்கள். ஓய்வு பெற்ற பிறகு அன்னார் வக்ஃப் செய்திருந்தார்கள். அன்னாருக்கு இரண்டு மகள்களும் உள்ளனர்.

அன்னாருடைய மகன் எழுதினார்: எங்களது தாயார் தொழுகைகள் மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதை பேணி வந்ததை சகோதர, சகோதரிகளாகிய நாங்கள் எங்களது குழந்தைப் பருவம் முதலே கண்டுள்ளோம். முறையாக சந்தா கொடுக்கக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். எம்.டி. ஏ பார்ப்பது அன்னாருடைய அன்றாட நடைமுறையாக இருந்தது. ஜமாஅத்தின் திட்டங்களில் பங்குபெற்று வந்தார்கள். தஹ்ரீகே ஜதீதுடைய முதல் பதிவேட்டின் சந்தாதாரராக இருந்தார்கள். 1971-ல் பாகிஸ்தான்,இந்தியாவிற்கிடையே போர் நிகழ்ந்தது. அதில் அமத்துல் ஹாதீ ஸாஹிபாவின் கணவர் பிரிகேடியர் ஸியாவுத்தீன் ஸாஹிப் கிழக்குப் பாகிஸ்தானில் இருந்தார்கள். அந்தப் பகுதி தற்போது பாகிஸ்தானில் உள்ளது. அங்கு அன்னார் நீண்ட காலம் இருந்தார்கள்.

பீர் துபைரீயா கூறுகின்றார்கள்: எனது தாயாரும், எனது இளைய சகோதரியும் அங்கேதான் இருந்தார்கள். சில காலத்திற்கு பிறகு தாயையும், சகோதரியையும் தந்தையார் அனுப்பி வைத்துவிட்டார்கள். தாயார் மிகவும் கவலையில் இருந்து வந்தார்கள். ஆயினும், அன்னார் தமது கவலையை பிள்ளைகள் எங்களிடம் வெளிப்படுத்தியதில்லை. மாறாக, எங்களுக்கு தைரியம் அளித்து வந்தார்கள். மேலும், சில மாதங்களுக்குப் பிறகு பிரிகேடியர் ஸாஹிப் அங்கிருந்து திரும்பி வந்து விட்டார்கள். ஏழைகளை கருத்தில் கொள்வதற்கும், அவர்களுக்கு ஈதி எனும் பெருநாள் அன்பளிப்பு கொடுப்பதற்கும் எப்போதும் பெருநாள்களின் போது எங்களுக்கு அறிவுறுத்தி வருவார்கள். மனிதம் முதலில் அமைப்பில் ஒவ்வொரு வருடமும் இரண்டு முறை பெரும் தொகையை அனுப்பி வந்தார்கள். கிணறு அமைப்பதற்கும், அடி பம்பு அமைப்பதற்கும், பிள்ளைகளின் கல்விக்காகவும், ஏழைகளின் உணவிற்கு ஏற்பாடு செய்வதற்காகவும் செலவிட்டு வந்தார்கள். இதனை டாக்டர் நூரி ஸாஹிப் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னாரின் மகள் அமத்துல் கபீர் தல்அத் ஸாஹிபா கூறுகின்றார்கள்: உரத்த

குரலில் திலாவத் செய்து வந்தார்கள். யாரைப் பற்றியும் புறம் பேச மாட்டார்கள். மற்றவர்களையும் அதிலிருந்து தடுத்து வந்தார்கள். கிலாஃபத்தின் மீது மிகவும் பற்று மிக்க தொடர்பு கொண்டிருந்தார்கள். தொடர்ந்து முறையாக எம்.டி. ஏ பார்த்து வந்தார்கள். முறையாக குத்பா கேட்பார்கள். மேலும், ஜமாஅத் புத்தகங்களை வாசிப்பதில் நிறைய பயன் உள்ளது என்று எங்களுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரிய வைத்து வந்தார்கள். அன்னாருக்கு சுயமே அதில் நிறைய ஆர்வம் இருந்தது. மேலும் எப்போதும் தலைமாட்டில் புத்தகம் இருந்து வந்தது. அவற்றை அன்னார் வாசித்து வந்தார்கள். எல்லாரிடமும் மகிழ்ச்சியுடன் சந்திக்கக் கூடியவராகவும், தொடர்பு வைக்கக் கூடியவராகவும் இருந்தார்கள்.

அன்னாரின் மகள் வழிப் பேத்தி கூறுகின்றார்: நாங்கள் திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு புதிய சூராவை மனனம் செய்யும்போதெல்லாம் எங்களுக்கு அன்பளிப்பு வழங்கி வந்தார்கள். ஊக்கமளித்து வந்தார்கள்.

கூறுகின்றார்: எனக்கு நினைவில் உள்ளது: அதாவது, ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு மிகவும் நீண்ட நேரம் முறையாக தஸ்பீஹ் மற்றும் துஆ செய்து வந்தார்கள். மேலும் : காலையில் ஆயத்தமான பிறகு திருக்குர்ஆனை தஃப்ஸீருடன் ஓதி வாருங்கள்; ரூஹானி கஸாயீன் படியுங்கள்: பின்னர் காலை உணவு எடுத்துக் கொள்ளுங்கள் என்று எனக்கும் அறிவுரை வழங்கி வந்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் நன்மைகளை அன்னாருடைய பிள்ளைகளிடத்திலும் தொடரச் செய்வானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஸாகிப் காம்ரான் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் நம்முடைய வாகிஃபே ஸிந்கீ ஆவார்கள். இன்றைய நாட்களில் ஸம்ஈ மற்றும் பஸரீ(ஒலி மற்றும் ஒளிபரப்பு) என்ற துறையின் நாயிப் ஆக இருந்தார்கள். அன்னார் 42 வயதில் இறைநியதிக்கேற்ப மரணமடைந்து விட்டார்கள். அவருக்கு food poisoning ஏற்பட்டுள்ளது என்பதே மருத்துவர்களின் கருத்தாக உள்ளது. (அதாவது உணவு விஷமாக மாறியுள்ளது). ஆனால், ஒரு விபத்து இவ்வாறும் நிகழ்ந்துள்ளது. அதாவது, ஸாகிப் ஸாஹிப் அவர்கள் மரணிப்பதற்கு சுமார் 45 நிமிடங்களுக்கு முன்னர் அதே உணவை உட்கொண்டிருந்த அன்னாரின் ஒரு மகனான ஆரிப் காம்ரானும் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

ஸாகிப் காம்ரான் ஸாஹிப் அவர்களின் தந்தை வழிப் பாட்டனாரான குர்தாஸ்பூர் மாவட்டம் தலோண்டி ஜங்லானைச் சேர்ந்த ஹஸ்ரத் சவ்த்ரி மவ்லா பக்ஷ் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். காம்ரான் ஸாஹிப் வக்ஃப் செய்திருந்தார்கள். ஜாமிஆவில் சேர்ந்தார்கள். மேலும் அங்கிருந்து தேர்ச்சி பெற்று பல்வேறு இடங்களில் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு ஒரு மகனையும், இரண்டு மகள்களையும் வழங்கியுள்ளான். ரூமைஸா காஷிஃபாவின் வயது 17 ஆகும். காஷிப் காம்ரானின் வயது 13 ஆகும். அன்னாரின் மூன்றாவது மகன் அன்னாருடன் மரணமடைந்துள்ளார். முழு குடும்பமே நோய்வாய்ப்பட்டிருந்தது. மற்ற அனைவரையும் அல்லாஹ் காப்பாற்றி விட்டான்.

ஜாமிஆ தேர்ச்சி பெற்ற பிறகு அன்னார் உள்ளூர் இஸ்லாஹ் வ-இர்ஷாத் துறையில் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் ஹதீஸ் பாடத்தில் மேற்படிப்பிற்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அதன் பிறகு வகாலத் தஃலீம் தஹ்ரீகே ஜதீத் துறையின் கீழ் சிரியாவிற்கு உயர் கல்விக்காக அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால், அங்கு நிலவிய சூழலின் காரணமாகவோ அல்லது வேறு ஏதோ காரணத்தினாலோ திரும்பி வந்துவிட்டார். பின்னர் அதன் பிறகு டிசம்பர், 2018-ல் தஹ்ரீகே ஜதீத் துறையின் ஸ்டுடியோக்கள் துவங்கப்பட்டன. அப்போது அன்னார் ஸம்ஈ மற்றும் பஸரீ தஹ்ரீகே ஜதீத் (ஒலி மற்றும் ஒளிபரப்பு) எனும் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். மேலும் மரணம் வரை அதே பொறுப்பில் தொண்டாற்றி வந்தார்கள். 18 வருடங்கள் அல்லாஹ் அன்னாருக்கு தொண்டாற்றுவதற்கான நற்பேறை வழங்கினான்.

அன்னாரின் தாயார் ஸாதிகா பேகம் ஸாஹிபா கூறுகின்றார்கள்: வக்ஃபே நவ் திட்டத்திற்கு முன்னர் காம்ரான் பிறந்திருந்தார்.

எனவே எனது இரண்டு சிறிய மகன்களை வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அன்னார் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் விண்ணப்பத்திருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அன்னாருடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் திட்டத்தில் இணைத்துக் கொண்டார்கள். அன்னாருடைய துணைவியார் கூறுகின்றார்கள்: மிகவும் நேசம் கொள்ளக் கூடிய நபராக இருந்தார்கள். வார்த்தைகளில் எடுத்துரைப்பது கடினமாகும். தொழுகைகளை கவனத்துடன் நிறைவேற்றக் கூடியவராகவும், கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான நேசம் கொண்டவராகவும், ஜமாஅத்தின் அமானிதங்களை பாதுகாக்கக் கூடியவராகவும், எல்லா நிலையிலும், எல்லா உறவிலும் தூய்மை நிறைந்த அன்பு செலுத்தக் கூடியவராகவும் எல்லாரையும் கருத்தில் கொள்ளக் கூடியவராகவும், ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரையும் கருத்தில் கொள்ளக் கூடியவராகவும் இருந்தார்கள். தமது பிள்ளைகளுக்கு சிறந்த வடிவில் தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள்.

அன்னாரின் தாயாரும் எழுதியுள்ளார்கள்: உங்களது பெற்றோருக்கு முன்னால் சீ என்று கூட கூறக் கூடாது என்ற திருக்குர்ஆன் கட்டளைக்கு ஏற்ப ஒருபோதும் உரத்த குரலில் அவர் பேசியதில்லை. மற்றவர்களின் இரகசியங்களை மறைக்கக் கூடியவராகவும், அலுவலக இரகசியங்களை பாதுகாக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். அன்னாரின் துணைவியார் கூறுகின்றார்கள்: சில முறை வெளியில் இருந்து விஷயங்களைக் கேள்விப்படும்போது அவரிடம் இது என்ன விஷயம்? என்று கேட்போம். அப்போது, அது அமானிதம் ஆகும்; உன்னிடம் எதையும் என்னால் கூற முடியாது என்று கூறிவந்தார்கள். ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவதன் பக்கம் மிகவும் கவனம் செலுத்தி வந்தார்கள். பிள்ளைகளுக்கும் கவனமூட்டி வந்தார்கள். மேலும், குடும்பத்தையும், பிள்ளைகளையும், மனைவியையும் கருத்தில் கொள்வதற்கும், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் எப்போதும் அன்னார் முயன்று வந்தார்கள்.

அன்னாரின் மகள் ரூமைஸா கூறுகின்றார்: எனது தந்தை மிகவும் பணிவு மிக்கவரும், நல்லவரும், ஏழைகளை கருத்தில் கொள்ளக் கூடியவரும், ஞானம் மிக்கவரும், தொலைநோக்குப் பார்வையுடையவரும், கட்டுப்படக் கூடியவரும் ஆவார். தஹஜ்ஜுத் தொழக் கூடிய நபராகவும் இருந்தார்கள். தர்பிய்யத் செய்வதற்கு ஆச்சரியம் கொள்ளத் தக்க வழிமுறையை மேற்கொண்டிருந்தார்கள். தமது கண்களின் சைகையினாலேயே விஷயங்களை புரிய வைத்து விடுவார்கள். எப்போதும் நல்ல தர்பிய்யத் கொடுப்பதன் பக்கம் கவலை கொண்டவராக இருந்து வந்தார்கள். மேலும், நீங்கள் வாகிஃபே நவ் ஆவீர்கள்; எனவே இதனை எப்போதும் உணர்ந்து செயல்படுங்கள் என்று எங்களுக்கு கூறிவந்தார்கள். கூறுகின்றார்: ஏராளமான விஷயங்களைப் பற்றி நான் அன்னாரிடம் கேள்வி கேட்டு வருவேன். அன்னார் பதில் கொடுப்பதற்கு ஒருபோதும் தயங்கியதே கிடையாது. அது எப்படிப்பட்ட விஷயமாக இருந்தபோதிலும் அன்னார் பதில் வழங்கி வருவார்கள்.

ஜமாஅத்தின் முரப்பியாகவும் இன்றைய நாட்களில் இறை வழிக் கைதியாகவும் ரூஹான் அஹ்மத் ஸாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு அன்னாரின் தர்பிய்யத்தின் கீழ் மற்றும் அன்னாரின் மேற்பார்வையின் கீழ் நீண்ட காலம் பணி செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எப்போதும் ஒரு பரிவு மிக்க நண்பரைப் போன்று எனக்கு வழிகாட்டி வந்தார்கள். அன்னார் மென்மையான இயல்பு படைத்தவராகவும், நற்பண்புகளுக்கு சொந்தக்காரராகவும், சிறந்த தலைமைத்துவப் பண்புகளுக்கு சொந்தக் காரராகவும் இருந்தார்கள். ஜமாஅத்தின் ஒரு தூய தொண்டராக இருந்தார்கள். அன்னாரின் வள்ளல் தன்மையும் அனுதாபமும் தன்னிகரற்றதாக இருந்தது.

இந்த இறை வழிக் கைதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் விரைவில் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டை செய்வானாக. மேலும் மர்ஹூமுடன் அல்லாஹ் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் உறவினர்களுக்கும், பிள்ளைகளுக்கும் தாயாருக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளிடம் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வானாக!

மூன்றாவது நற்குறிப்பு பெனின் கோதோனோ பகுதியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் முஹம்மது இஸ்ஹாக் தாவூத் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களில் 60வது வயதில்

மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் பெனின் நாட்டின் தாவூத் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் தான் பெனின் நாட்டில் எல்லாரையும் விட முதலில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். பெனின் நாட்டின் முதல் அஹ்மதியான மர்ஹூம் மதிப்பிற்குரிய திக்ருல்லாஹ் ஸாஹிப் தாவூத் அவர்கள் அன்னாருடைய பெரிய தந்தையார் ஆவார்கள். மர்ஹூமுடைய தந்தையார் மர்ஹூம் ஈஸா தாவூத் ஸாஹிப் அவர்கள் உயிருடன் இருந்த வரை பெனின் நாட்டின் தேசிய நாயிப் அமீராக இருந்தார்கள். 1980-ல் அன்னார் மாணவராக இருந்தபோது அன்னார் மர்ஹூம் திக்ருல்லாஹ் தாவூத் ஸாஹிப் அவர்களின் தப்லீஃக் மூலமாக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு, தமது பெரிய தந்தையாருடன் இணைந்து தமது பெற்றோருக்கு தப்லீஃக் செய்து வந்தார்கள். மேலும் சிறிது காலத்திற்கு பிறகு அன்னாரின் தப்லீஃக்கின் மூலமாக தாயாரும், தந்தையாரும் அஹ்மதி ஆகிவிட்டனர். 2022-ல் செனிகால் பல்கலைகழகத்திலிருந்து விலங்கியல் (zoology) பாடத்தில் PHD பட்டம் பெற்றார்கள். அதன் பிறகு, பெனினிற்கு திரும்பி வந்து பாராகோ யூனிவர்சிட்டியில் பேராசிரியராக பணி நியமனம் பெற்றார்கள். தமது திறமையின் அடிப்படையில் நாடு முழுவதும் மற்றும் வெளிநாட்டிலும் ஏராளமான கருத்தரங்களில் பங்கு பெற்றுள்ளார்கள். நீண்ட காலம் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா பெனின் ஆக தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றுள்ளார்கள். மாணவப் பருவத்திலேயே அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். மேலும், பொதுவாக பெனின் நாட்டின் ஆரம்ப கால அஹ்மதிகளில் அன்னார் ஒருவர் ஆவார்கள். இன்னும் கூறப்போனால், பெனின் நாட்டில் எல்லாரையும் விட முதல் முதலில் வஸிய்யத் செய்தவர் என்ற பெருமை அன்னாருக்கு கிடைத்துள்ளது என்று எழுதப்பட்டுள்ளது.

தற்போது லஜ்னாவின் தேசிய தர்பிய்யத் செயலராக இருக்கின்ற அன்னாரின் துணைவியார் ரீஹானா தாவூத் ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நான் திருமணத்திற்குப் பிறகு எனது கணவரின் தப்லீஃக்கின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டேன். அன்னார் எனக்கு யஸ்ஸர்னல் குர்ஆனையும் பின்னர் (முழு)திருக்குர்ஆனை ஓதுவதற்கும் கற்றுக் கொடுத்தார்கள். மிகவும் கண்ணியம் படைத்தவரும்,நேர்மையாளரும், மனித குலத்தின் மீது அனுதாபம் கொண்ட, ஏழைகளை பராமரிக்கக் கூடிய மனிதராகவும் இருந்தார்கள். ஜமாஅத்தின் பணிகளுக்கு எப்போதும் ஆயத்தமாக இருந்தார்கள். முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். எனக்கும் அறிவுறுத்தி வந்தார்கள். மேலும் வீட்டில் திருக்குர்ஆன் ஓதி வாருங்கள்; அப்போதுதான் நமது வீட்டில் இறைவனின் கருணைகள் இறங்கும் என்று அன்னார் என்னிடம் கூறிவந்தார்கள்.

கூறுகின்றார்கள்: யூனிவர்சிட்டியில் நாயிப் டீன் என்ற பொறுப்பில் அமர்ந்தபோது ஒரு நாள் ஒரு பெண்மணி அழுது கொண்டு வந்தார். அவர் கூறினார்: எனது மகள் (தேர்வில்) தோல்வியுறுகின்றாள்; அவளை தேர்ச்சி பெற செய்து விடுங்கள். அவள் (தேர்வில்) தோல்வியடைந்து விட்டால் பின்னர் எனது கணவர் அவளுக்குரிய கல்விக் கட்டணத்தைக் கொடுக்க மாட்டார். மேலும், அவளை கொன்று விடுவார்.

அவர் ஏராளமான பணத்தை கொண்டு வந்திருந்தார். மேலும், இந்தத் தொகையை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். அப்போது அன்னார் கூறினார்கள்: பணம் கொடுத்து தேர்ச்சி பெற வேண்டுமென்றால் பின்னர் ஏழை ஒருபோதும் தேர்ச்சி பெறமாட்டார். நீங்கள் இவ்வாறு செய்யுங்கள்; அதாவது நீங்கள் எனக்கு கையூட்டு கொடுப்பதற்காக எந்த பணத்தை கொண்டு வந்தள்ளீர்களோ அதனை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் அஹ்மதியாவேன். நான் லஞ்சம் வாங்கமாட்டேன். நீங்கள் இந்தத் தொகையை கொண்டு நீங்கள் பீஸ் கொடுத்து விடுங்கள்; ஏதாவது குறைவு ஏற்பட்டால் நான் உங்களுக்கு கூடுதலாக ஃபீஸ் செலுத்தி விடுவேன். ஆனால், லஞ்சம் கொடுத்து தேர்ச்சி பெற்று விடலாம் என்ற இந்த சதித்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

ஆனால், எவ்வாறு இருப்பினும், அந்தப் பெண்மணி மறந்து போய் பணப்பையை அங்கே விட்டுச் சென்று விட்டார். இதோ பணப்பை கிடக்கின்றது என்று மர்ஹூமின் மனைவி மர்ஹூமிற்கு காட்டியபோது, மர்ஹூம் அதனை எடுத்துக் கொண்டு கணக்காளரிடம் சென்றார்கள். உங்களுக்கு என்னை தெரியாது. அவ்வாறிருக்க எனது வீட்டை உமக்கு யார் கூறியது? என்று அன்னார் அந்தப் பெண்மணியிடம் கேட்டார்கள். அதற்கு எனக்கு யூனிவர்சிட்டியின் கணக்காளர் கூறினார் என்று பதில் அளித்தார். எவ்வாறு இருப்பினும், அந்தப் பணப் பையை எடுத்துக் கொண்டு அந்த கணக்காளரிடம் சென்றார்கள். அந்தத் தொகையை அவரிடம் கொடுத்தார்கள். மேலும், இதனை திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று மர்ஹூம் கூறிவிட்டார்கள். யூனிவர்ஸிட்டியின் கூட்டம் நடைபெற்றது. அங்கு இந்த அனைத்து விவகாரத்தையும் முன் வைத்தார்கள். அப்போது அங்கு கூடியிருந்த நிர்வாகத்தினர்களான பேராசிரியர்கள் இவ்வாறு கூறினர்: அந்தப் பெண்மணி 3 லட்சம் ஃபிரான்ங் எடுத்துக் கொண்டு வந்திருந்தார்; இதில் இரண்டரை லட்சமே உள்ளது.

அதிலிருந்த பணத்தை ஒரு கணக்காளரே மோசடி செய்திருந்தார்.

எவ்வாறு இருப்பினும் லஞ்சம் பெற்றதாக அன்னார் மீது குற்றம் சுமத்தலாம்; மேலும் அன்னாரை நாயிப் டீன் என்ற பதவியில் இருந்து நீக்கிவிடலாம் என்று எதிரிகள் விரும்பியிருந்தனர். ஆனால், அதில் வெற்றி கிடைக்கவில்லை. மேலும், அன்னார் மிகவும் நேர்மையான மனிதர் ஆவார்கள் என்று பின்னர் யூனிவர்ஸிட்டி நிர்வாகிகளும் ஏனையவர்களும் அன்னாருடைய தோழர்களும் வெளிப்படையாக கூறினார். எப்போதும் தமது வீதிகளில் உள்ள ஏழை விதவைகளை கருத்தில் கொண்டிருந்தார்கள். ஒருவருடைய வீட்டை செப்பனிட்டு கொடுப்பார்கள். குழந்தைகள் மீது அன்பு செலுத்துவார்கள். ஒவ்வோர் உறுப்பினருடனும் அன்பு செலுத்துவார்கள்.

அன்னாரின் மரணத்தையொட்டி பாராகோ யுனிவர்ஸிட்டியின் அக்ரிகல்சர் துறையின் ஏராளமான பேராசிரியர்கள் கோதானோ ஊருக்கு வந்தனர். துறையின் இன்சார்ஜ் பேராசிரியரான டாக்டர் இப்ராஹீம் கூறினார்: அன்னார் மிகவும் பணிவு மிக்கவராகவும், நேர்மையாளராகவும் இருந்தார்கள். யுனிவர்சிட்டியில் பாபாபோனர் என்ற பெயரால் பிரபலமாகியிருந்தார்கள். இது ஃபிரஞ்ச் மொழி சொல்லாகும். அதன் பொருள் ஒவ்வொருவருக்கும் அருள் வழங்கக் கூடியவர்; ஒவ்வொரு தேவையுடையவருக்கும் உதவி செய்வார்கள். சட்டைப்பையில் என்ன இருக்குமோ அதனை கொடுத்துவிடுவார்கள். ஒருபோதும் வெறுங்கையுடன் அனுப்ப மாட்டார்கள். அல்லாஹ்வின் மீது அதிகமான நிச்சய உறுதி கொண்டிருந்தார்கள்.

இஸ்ஹாக் தாவூத் ஸாஹிப் அவர்களுக்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும் மற்றும் கிலாஃபத்தின் மீதும் எல்லையற்ற அன்பு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பின் நிலை இவ்வாறு இருந்தது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வயது 63 ஆகும் என்று அன்னார் கூறிவந்தார்கள். எனவே அல்லாஹ்வே! எனக்கு இதை விட அதிகமான வயதை வழங்காதே என்று அன்னார் துஆ செய்து வந்தார்கள்.

இதய நோயாளியாக அன்னார் ஆகிவிட்டார்கள். ஒரு முபல்லிஃக் கூறினார்: இதய அறுவை சிகிச்சைக்காக அன்னார் ஃபிரான்ஸ் சென்றபோது அன்னார் அலைஸல்லாஹு என்ற மோதிரத்தை அணிந்திருந்தார்கள். மருத்துவர்கள் அதனை கழற்ற முயன்றபோது அன்னார் இவ்வாறு கூறினார்கள்: இந்த மோதிரத்தை கழட்டாதீர்கள்; இது மரணம் வரை என்னுடன் இருக்கும்; ஏனெனில் இதுவே அல்லாஹ்வின் அருளாகும். அதனை நான் எப்போதும் நினைவில் வைப்பேன்.

இங்கு இன்றைய நாட்களில் அன்னார் பொறுப்பு அமீராக உள்ளார்கள். மியான் கமர் ஸாஹிப் முபல்லிஃக் இன்சார்ஜ் ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: பாராகோவின் மண்டல முபல்லிஃக் ஆக நான் இருந்தேன். அப்போது அன்னார் என்ன வருமானம் கிடைத்ததோ அதற்கேற்ப முதலிலேயே தமது வஸிய்யத்தையும், ஏனைய சந்தாக்களையும் ஒரு கவரில் வைத்து எனக்கு ரஸீது போட்டு கொடுங்கள் என்று மஸ்ஜிதிற்கு கொண்டு வருவார்கள்.எப்போதும் புன்சிரித்துக் கொண்டிருப்பார்கள். மேலும், ஒவ்வொரு துன்பம் மற்றும் கஷ்டத்தின்போதும் இவ்வாறு கூறுவார்கள்: நான் துஆ செய்கின்றேன்; காலத்தின் கலீஃபாவிற்கும் துஆவிற்காக எழுதியுள்ளேன்; அல்லாஹ் எளிமையாக்கி விடுவான்.

அன்னாரின் உறவினர்களில் மனைவி மட்டுமின்றி இரண்டு மகள்களும், இரண்டு மகன்களும் அடங்குவர். மூத்த மகள் அஸீஸா முக்ஸதா தாவூத் வேளாண் துறையில் பி எச் டி செய்து கொண்டிருக்கின்றார்கள். ரகீப் தாவூத் மற்றும் மஸ்ரூர் தாவூத் என்ற இரண்டு மகன்கள் கம்ப்யூட்டர் தொடர்பான கல்வியை பயின்று வருகின்றார்கள்.

அல்லாஹ் இந்தப் பிள்ளைகளை அவர்களின் தந்தையாரின் அடிச்சுவட்டின் வழியில் வழிநடத்துவானாக. மேலும் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும்

கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. தொழுகைக்குப் பிறகு இன்ஷாஅல்லாஹ் ஜனாஸா தொழுகை நடைபெறும்.

தமிழாக்கம்:
மவ்லவி: A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * *

## மல்ஃபூஸாத்.. 1-ம் பக்கம் தொடர்ச்சி

என்னவென்றால் துஆவில் எதிரிகளையும் கூட விலக்கி வைக்கக் கூடாது. துஆ எந்த அளவிற்கு விசாலமானதாக இருக்குமோ அந்த அளவிற்கு துஆ செய்யக் கூடியவருக்கு நன்மை கிடைக்கும். துஆவில் எந்த அளவிற்கு கருமித் தனம் செய்யப்படுமோ அந்த அளவிற்கு அவர் அல்லாஹ்வின் நெருக்கத்திலிருந்து விலகிக் கொண்டே செல்வார். உண்மை என்னவென்றால், மிகவும் பரந்துபட்ட இறைவனின் அருட்களை எந்த நபர் குறுகியதாக ஆக்கிக் கொள்கின்றாரோ அத்தகைய நபரின் ஈமானும் பலவீனமானது ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 478 - காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

## தஃப்ஸீரே கபீர்... 1-ம் பக்கம் தொடர்ச்சி

செய்வதற்காக படைக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பான வானவர் ஆவர். இன்னும் சிலரோ ஸஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம்) வரை இந்த அறிவிப்பை கொண்டு சென்று விட்டனர். அதாவது அவருக்கு நூறு தலைகள் உள்ளன. ஒவ்வொரு தலையிலும் நூறு வாய்கள் உள்ளன. மேலும் ஒவ்வொரு முகத்திலும் நூறு நாவுகள் உள்ளன. ஒவ்வொரு நாவும் நூறு நூறு மொழிகளில் இறைவனை தஸ்பீஹ் செய்கின்றது. இந்த அறிவிப்பை எடுத்துரைத்து அநேகமாக இதன் மூலம் தஸ்பீஹ் செய்வதற்கான உரிமை முழுமை பெற்று விடும் என்று அவர்கள் கருதிக் கொண்டனர். உண்மையில், இந்த தஸ்பீஹை காட்டிலும் அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயமோ அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றது. முழு உலகிலும் முஸ்லிம்கள் பரவியிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் அல்லாஹ் புகழப்படுகின்றான். எனது கண்ணியத்திற்குரிய ஆசிரியர் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த இடத்தில் ரூஹ் என்பதற்கு இறை வேதம் என்று பொருள் கொடுத்து வந்தார்கள். இந்தப் பொருள் மேலே கூறப்பட்டுள்ள அனைத்து பொருள்களைக் காட்டிலும் சிறந்தது ஆகும். மேலும் மிகவும் சரியானதும் ஆகும். ஏனெனில், இந்த வசனத்திற்கு முன்னரும், பின்னரும் திருக்குர்ஆனைப் பற்றியே கூறப்பட்டுள்ளது. ஆனால் அஹ்மதியா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாக இந்த வசனத்தைக் குறித்து விவாதித்துள்ளார்கள். மேலும், அதன் பொருள் மனித ஆன்மாவே ஆகும் என்று கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த வசனத்தில் ஆன்மா தொடர்பாக மிகப் பெரிய ஞானங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ரூஹ் என்பது என்ன? என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக ஹதீஸ்களில் பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன. சிலரோ இவ்வாறு எழுதியுள்ளனர்: இந்தக் கேள்வியை யூதர்கள் மதீனாவில் கேட்டனர். ஆனால் இதற்கு எதிராக இந்த சூரா மக்காவில் இறங்கிய சூரா ஆகும் என்ற இந்த விஷயம் முன் வைக்கப்படுகின்றது. இதற்கு, இந்த சூராவின் சில வசனங்கள் மதீனாவில் இறங்கின என்று அவர்கள் பதிலளிக்கின்றனர். (ஆனால்,நான் மேலே கூறி வந்துள்ளதைப் போன்று அது சரியானதல்ல).

சிலர் இவ்வாறு கூறியுள்ளார்கள்: இந்தக் கேள்வி முதலில் மக்காவில் எழுந்தது. பின்னர் மீண்டும் மதீனாவில் எழுந்தது. அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்தக் கேள்வி மதீனாவில் கேட்கப்பட்டது. ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இந்த சூரா மக்காவில் இறங்கிய சூரா என்ற விஷயத்தின் அறிவிப்பாளரும் அவரே ஆவார்கள். அதே கேள்வி மீண்டும் மதீனாவில் கேட்கப்பட்டிருக்கக் கூடும் என்று அதற்கு சில ஆலிம்கள் பதில் அளித்துள்ளனர். எந்த மக்கள் இதனை மக்காவின் அறிவிப்பாக கூறுகின்றனரோ அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: அதாவது மக்காவைச் சேர்ந்த சில மக்கள் மதீனாவிற்குச் சென்றார்கள். மேலும் அங்கு சென்று யூதர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள்.மேலும் இவ்வாறு எங்களில் நபித்துவ வாதம் செய்யும் ஒருவர் இருக்கின்றார். அவரது பொய் வெளிப்பட்டு விடும் வகையில் நாங்கள் அவரிடம் என்ன கேள்வி கேட்க வேண்டும்? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு (யூதர்களாகிய) அவர்கள் இந்த பதிலை வழங்கினர்: அதாவது, ரூஹ் , குகை வாசிகள், மற்றும் துல்கர்னைன் ஆகியவற்றைக் குறித்து அவரிடம் கேளுங்கள். அதன் பிறகு அவர்கள் மக்காவிற்கு திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டனர். மேலும் இந்த வசனம் இறங்கியது.

என்னைப் பொருத்த வரை, முதல் முறையாக மக்காவிலேயே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. மேலும் அங்கேயே அதற்கு பதில் (அவர்களுக்கு) கிடைத்தது. மதீனாவிலும் யூதர்கள் அந்தக் கேள்வியை கேட்டிருப்பது சாத்தியமானதாகும். இன்னும் கூறப்போனால் அதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. ஏனெனில், யூதர்கள் ஆர்வமூட்டியதன் காரணத்தால் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கும்போது அவர்களும் கண்டிப்பாக இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பார்கள். ஆனால், இந்த வசனம் மீண்டும் இறங்கியது என்பது சரியானதல்ல. மாறாக, மதீனாவில் இந்தக் கேள்வி கேட்கப்படும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளிக்கும்போது இந்த வசனத்தை ஓதியிருப்பார்கள். இந்த சம்பவத்தை ஓர் அறிவிப்பாளர் அறிவித்துள்ளார். மேலும் அநேகமாக இந்தக் கேள்விக்கு பதிலாக இந்த வசனம் இறங்கியிருந்தது என்று பின்னர் வந்த அறிவிப்பாளர்களில் யாரோ ஒருவர் புரிந்து கொண்டார்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 380, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

## 128-வது காதியான் ஜல்ஸா-2023

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் 128-வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்கஸிய்யா-காதியான்)




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது ஹைதராபாத் முன்ஸிஃப் பத்திரிகை செய்துள்ள ஆட்சேபனைகளுக்கு பதில்

**என்னை காஃபிர் என்று கூறி தமது குஃப்ரின் மீது முத்திரையிட்டுக் கொள்கின்றனர்**
**இதுவே அவர்கள் அனைவரின் முகங்களாகும்.**
**நாமோ பிரதிபலிக்கும் கண்ணாடி ஆவோம்**

**(வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் கவிதை)**

ஹைதராபாத் முன்ஸிஃப் பத்திரிகை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மீது செய்த ஆட்சேபனைகளுக்கு நாம் கடந்த இதழில் வழங்கியிருந்தோம். ஆட்சேபனைகளின் விளக்கம் மற்றும் பின்னணியையும் கடந்த வார இதழில் பார்க்க முடியும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தி ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆங்கிலேயோர்களுடன் இணைந்து சதித் திட்டம் தீட்டினார்கள் என்று முன்ஸிஃப் குற்றம்சாட்டியிருந்தது. நவூதுபில்லாஹ் மின் தாலிக். மேலும், அவ்வாறு இணைந்து சதித் திட்டம் தீட்டுவது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; அன்னார் (அலை) பாதிரிமார்களை சந்தித்து பழகுவதும், ஒன்றாக அமர்வதும் எழுவதும் என்பது கூட எப்படி சூரியன் மேற்கிலிருந்து உதயமாகுவது சாத்தியமற்றதோ அதுபோன்று சாத்தியமற்றதாகும் என்பதையும் நாம் ஆதாரங்களுடனும் சான்றுகளுடனும் விளக்கியிருந்தோம். இதற்கான மாபெரும் காரணம் என்னவென்றால் (பாதிரிகளாகிய) அவர்கள் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை மிகக் கடுமையாக ஏசி பேசி வந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர்களின் மார்க்கத்திற்கு எதிராக எப்படிப்பட்ட மகத்துவ மிக்க ஜிஹாது செய்தார்கள்? என்றால் கடந்த ஆயிரத்து நானூறு ஆண்டுகளில் அதற்கு நிகரான ஒன்றை எவராலும் முன் வைக்க முடியாது. அவ்வாறிருக்க, ஆங்கிலேயோர்கள் தங்களது நலனுக்கு எதிராக தங்களது மார்க்கத்தின் அஸ்திவாரத்தையே அசைத்து விடக் கூடிய அத்தகைய நபரை முன்நிறுத்துவார்களா? கிறிஸ்தவத்திற்கு எதிராக அன்னாரின் மகத்துவ மிக்க ஜிஹாதின் ஒரு சிறு ஒளியை நாம் நமது சொற்களில் எடுத்துரைத்திருந்தோம். இன்று நாம் இது தொடர்பாக அன்னாருடைய சில மேற்கோள்களையும் முன்வைப்போம். சிலுவை கொள்கையை தூள் தூளாக்க வேண்டும் என்பதற்காக இந்த எளியவன் மஸீஹின் பெயரால் அனுப்பப்பட்டுள்ளேன் என்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

يَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ

(அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியை கொல்வார்) என்ற ஹதீஸின் அடிப்படையில் கிறிஸ்துவத்தை வேரோடு அழிப்பதும், இஸ்லாம் இழந்த மகத்துத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதுமே ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய இறை பணியாக இருந்தது. எனவே சிலுவையை கொள்கையை தூள் தூளாக்குவதே எந்த நபருடைய கடமையாக இருக்குமோ அவரை ஆங்கிலேயோர்கள் முன்நிறுத்தியிருக்க முடியுமா? என்பது சிந்திக்க வேண்டிய விஷயமாகும். உண்மை என்னவென்றால், மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற பதவி மற்றும் உம்மதீ நபி என்ற அந்தஸ்து போன்றவை அன்னாருக்கு அல்லாஹ்வின் புறமிருந்து கிடைத்திருந்தது. ஆங்கிலேயர்கள் கூறியதற்கிணங்க அன்னார் (அலை) நபித்துவ வாதம் செய்தார்கள் என்பது மிகவும் நகைப்பிற்குரிய குற்றச்சாட்டு ஆகும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் தமது பணி மற்றும் தமது பதவியைக் குறித்து எந்த சொற்களில் எடுத்துரைக்கின்றார்கள் என்பதை பாருங்கள்:

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த எளியவனுக்கு ஹஸ்ரத் ஈஸா மஸீஹின் இயல்புடன் ஒரு சிறப்பான ஒப்புமை உள்ளது. மேலும், இதே இயல்பின் ஒப்புமையின் காரணமாக மஸீஹ் என்ற பெயரால் சிலுவைக் கொள்கை தூள் தூளாக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த எளியவன் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நான் சிலுவையை உடைப்பதற்காகவும், பன்றியை கொல்வதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். எனது வலமும், இடமும் இருந்த அந்த தூய வானவர்களுடன் நான் விண்ணிலிருந்து இறங்கியுள்ளேன். என்னுடன் இருக்கும் எனது இறைவன் எனது பணியை முழுமை செய்வதற்காக ஒவ்வொரு தகுதி வாய்ந்த இதயத்திலும் அவர்களை நுழையச் செய்வான். மாறாக, நுழையச் செய்து கொண்டிருக்கின்றான். நான் மௌனமாக இருந்தாலும் மேலும் எனது எழுதுகோல் எழுதுவதை நிறுத்தி விட்டாலும் அப்போதும் கூட என்னுடன் இறங்கியுள்ள அந்த வானவர்கள் தமது பணியை நிறுத்த மாட்டார்கள். அவர்களின் கரங்களில் சிலுவையை முறிப்பதற்காகவும், படைப்பினங்களை வணங்குதல் எனும் சங்கிலியை உடைப்பதற்காகவும் பெரும் பெரும் வாள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 11, அடிக்குறிப்பு)

**மஸீஹ் சிலுவையை முறிப்பார். பின்னர் அது கியாமத் வரை ஒன்றுசேர முடியாது.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிலுவையை முறித்தல் என்பதை மரக்கட்டையால் ஆன சிலுவை அல்லது தங்கம் மற்றும் வெள்ளியால் ஆன சிலுவை முறிக்கப்படும் என்று புரிந்து கொள்வது பெரும் தவறாகும். இந்த வகையிலான சிலுவைகள் எப்போதும் இஸ்லாமிய போர்களில் உடைக்கப்பட்டு வந்துள்ளன. இன்னும் கூறப்போனால், இதன் பொருள் என்னவென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் சிலுவைக் கொள்கையை உடைப்பார் என்பதாகும். மேலும் அதன் பிறகு உலகில் சிலுவைக் கொள்கை வளர்ச்சி பெறாது. சிலுவை எப்படி முறிக்கப்படும் என்றால் பின்னர் கியாமத் வரை அது ஒன்றிணைய முடியாது. (ஹக்கீகத்துல் வஹீ,ரூஹானீ கஸாயீன், தொகுதி 22, பக்கம் 324)

**மஸீஹ் இப்னு மர்யம் மரணிப்பதிலேயே இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது**

ஆங்கிலேயர்களின் இறைவன் மரணித்து விட்டார் என்பதை ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நிரூபணம் செய்தார்கள். திருக்குர்ஆனின் அடிப்படையில், ஹதீஸ்களின் அடிப்படையில், பைபுளின் அடிப்படையில், வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் அன்னார் (அலை) இதனை நிரூபணம் செய்தார்கள். மேலும், அவரின் கல்லறை ஸ்ரீநகர் கானியார் வீதியில் இருக்கின்றது என்பதை கூட அன்னார் (அலை) கூறிவிட்டார்கள். ஆங்கிலேயர்கள் தங்களது இறைவனை மரணித்தவர் என்று நிரூபணம் செய்து தங்களது மார்க்கத்தை உயிருடன் புதைக்கக் கூடிய இப்படிப்பட்ட நபரை தங்களது நலனிற்கு எதிராக முன்நிறுத்த முடியுமா?எனவே முட்டாள்தனமான ஆட்சேபனைகளிலிருந்து முன்ஸிஃப் பத்திரிகை விலகிக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக நாம் அன்னாருடைய கீழ் கண்ட ஒரு மேற்கோளை முன் வைக்கின்றோம். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் மிகவும் அழுத்தத்துடனும், முழு உறுதியுடனும், அகப்பார்வையுடனும் கூறுகின்றேன்:

மற்ற மார்க்கங்களை அழித்துவிடுவதற்கும், இஸ்லாத்திற்கு வெற்றியையும், வலிமையையும் வழங்குவதற்கும் அல்லாஹ் எண்ணம் கொண்டுள்ளான். தற்போது இறைவனின் இந்த எண்ணத்தை எதிர்க்கக் கூடிய எந்த கரமும், ஆற்றலும் இல்லை. அவன்

فَعَّالٌ لِّمَا يُرِيْدُ

(அவன் தான் விரும்பியதை செய்யக் கூடியவன்) ஆவான். முஸ்லிம்களே! நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் என் மூலமாக உங்களுக்கு இந்த செய்தியை வழங்கி விட்டான். நான் எனது தூதுச் செய்தியை எட்ட வைத்துவிட்டேன். இனி இதனைக் கேட்பதும், கேட்காமல் இருப்பதும் உங்களது அதிகாரத்தில் உள்ளது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 14 september 2023 Issue No. 37

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

விட்டார்கள் என்பது உண்மையான விஷயம் ஆகும். மேலும் நான் இறைவனின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன்: தோன்ற இருந்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன். மேலும் ஈஸாவின் மரணத்திலேயே இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது என்பதும் உறுதியான விஷயம் ஆகும். (லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 290)

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் பெரும் பெரும் பாதிரிகளிடம் கேட்டேன்; மஸீஹ் மரணித்து விட்டார் என்பது நிரூபணம் ஆகிவிட்டால் பின்னர் எங்களது மார்க்கம் உயிருடன் இருக்க முடியாது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

எந்த நபர் தேவனாக இருந்த பிறகும் மூன்று நாட்கள் வரை மரணித்திருந்தாரோ அவரது வல்லமையின் பெயரை குறிப்பிடுவதும் கூட வெட்கத்திற்குரிய விஷயம் ஆகும். ஒரு மனிதன் ஒருபோதும் இறைவனாக முடியாது என்பதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வலிமையான அறிவுப்பூர்வமான சான்றுகளாலும், வேதத்தின் சான்றுகளாலும் நிரூபணம் செய்துள்ளார்கள். ஆங்கிலேயர்களின் இறைவனின் ஆற்றல் அற்ற நிலை மற்றும் இயலாமையை எவ்வளவு வலிமையான சொற்களில் அன்னார் (அலை) எடுத்துரைத்துள்ளார்கள் என்பதை பாருங்கள்! இப்படிப்பட்ட நபரை ஆங்கிலேயர்கள் தங்களது நலனிற்கு எதிராக முன்நிறுத்தி இருப்பார்களா என்ன?

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: கண்ணியமிக்கவர்களே! பாதிரிமார்கள் கூட தங்களது தேவனை வலிமையுடையவராக கருதுவதில்லை. ஏனெனில், அவர்களின் இறைவன் தனது எதிரிகளின் கைகளால் அடி வாங்கிக் கொண்டு இருந்தார்; சிறை பிடிக்கப்பட்டார்; சவுக்கால் அடிக்கப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டார்.

அவர் வல்லமையுடையவராக இருந்திருந்தால் பின்னர் தான் தேவனாக இருந்த பிறகும் இவ்வளவு இழிவுகளை ஒருபோதும் சந்தித்திருக்க மாட்டார். மேலும், அவர் வல்லமையுடையவராக இருந்திருந்தால் பின்னர் தனது அடியார்களின் இரட்சிப்பிற்காக சுயமே மரணித்து விடுவதற்கும், மேலும் இந்த வழிமுறையின் மூலமாக அடியார்கள் விடுதலை பெற வேண்டும் என்ற திட்டத்தை வகுப்பதற்கும் அவருக்கு என்ன அவசியம் வந்தது? எந்த நபர் தேவனாக இருந்த பிறகும் கூட மூன்று நாட்கள் வரை மரணித்து இருந்தாரோ அவரது வல்லமையின் பெயரைக் குறிப்பிடுவது கூட வெட்கத்திற்குரிய விஷயம் ஆகும். மேலும், இறைவனோ மூன்று நாள்கள் வரை மரணித்திருந்தார்; ஆனால், அவரது அடியார்கள் மூன்று நாட்கள் வரை இறைவன் இல்லாமலேயே உயிருடன் இருந்தார்கள் என்பது விநோதமான விஷயம் ஆகும். (சஷ்மாயே மஸீஹீ, ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 371)

**தவ்ராத் மற்றும் இன்ஜீலில் முத்தெய்வக் கொள்கைக்கான பெயரோ அடையாளமோ கூட இல்லை**

அன்னார் (அலை), அவர்களுடைய முத்தெய்வக் கொள்கையையும் வலுவான பகுத்தறிவு சான்றுகளாலும், வேதத்தின் சான்றுகளாலும் ரத்து செய்துள்ளார்கள். எனவே தங்களது மார்க்கத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிவதற்கு ஒவ்வொரு தருணமும், ஒவ்வொரு நொடியும் தயாரா அமர்ந்திருந்த இப்படிப்பட்ட நபரை ஆங்கிலேயர்கள் தங்களது நலனிற்கு எதிராக முன்னிறுத்தி இருப்பார்களா? என்று சிந்திக்க வேண்டும். அன்னார் (அலை) எப்படிப்பட்ட வலிமை மிக்க சான்றுகளால் முத்தெய்வக் கொள்கைக்கு மறுப்பு வழங்கியுள்ளார்கள் என்பதை பாருங்கள்! இந்த ஒரு சான்று என்பது சமுத்திரத்திற்கு எதிரில் ஒரு துளியைப் போன்றதாகும்.

முத்தெய்வக் கொள்கையை திருக்குர்ஆன் மட்டும் நிராகரிக்கவில்லை. மாறாக, தவ்ராத்தும் கூட அதனை மறுக்கின்றது. ஏனெனில், மூஸா (அலை)அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த தவ்ராத்தில் இந்த முத்தெய்வக் கொள்கையைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. இன்னும் கூறப்போனால் சைகையாகக் கூட கூறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறில்லையென்றால் இந்த விஷயம் வெளிப்படையாகும். அதாவது, தவ்ராத்தில் அந்த மூன்று தெய்வங்களைப் பற்றி போதனை வழங்கப்பட்டிருந்தால் பின்னர் யூதர்கள் அந்த போதனையை மறப்பது என்பது சாத்தியமற்ற விஷயம் ஆகும். நான் இது தொடர்பாக சுயமே முயற்சி செய்து சில யூதர்களிடம் சத்தியம் செய்து கூறும் படி கேட்டேன். அதாவது தவ்ராத்தில் இறைவனைப் பற்றி உங்களுக்கு என்ன போதனை வழங்கப்பட்டுள்ளது? என்று கேட்டேன். முத்தெய்வக் கொள்கைக்கான போதனை வழங்கப்பட்டுள்ளதா? அல்லது வேறு ஏதாவது வழங்கப்பட்டுள்ளதா? என்று கேட்டேன். அப்போது அந்த யூதர்கள் எனக்கு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதங்கள் இப்போது வரை என்னிடம் உள்ளன. அந்தக் கடிதங்களில் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்: தவ்ராத்தில் முத்தெய்வக் கொள்கைக்கான போதனையின் பெயரோ அடையாளமோ கூட இல்லை. இன்னும் கூறப்போனால், இறைவனைக் குறித்து திருக்குர்ஆன் என்ன போதித்துள்ளதோ அதுவே தவ்ராத்தின் போதனை ஆகும்.

எனவே தவ்ராத்தின் போதனையிலும், திருக்குர்ஆனின் போதனையிலும் இடம் பெற்றிராத கொள்கையை பிடிவாதமாக பிடித்துக் கொண்டிருக்கும் அந்த சமுதாயத்தின் மீது மிகவும் வேதனை ஏற்படுகின்றது. இன்னும் கூறப்போனால் முத்தெய்வக் கொள்கைக்கான போதனை இன்ஜீலிலும் கூட காணப்படவில்லை என்பதே உண்மை ஆகும். (சஷ்மாயே மஸீஹீ, ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 373)

தற்காலத்தின் பாதிரிமார்களைத் தவிர்த்து வேறு ஒரு தஜ்ஜால் இருக்கின்றான் என்ற விஷயம் எந்த அம்சத்தின் அடிப்படையிலும் சரியானதாக இருக்க முடியாது.

அன்னார் (அலை) பாதிரிமார்களை இக்காலத்தின் தஜ்ஜால் என்று நிரூபணம் செய்துள்ளார்கள். அந்த தஜ்ஜாலின் வெளிப்பாட்டைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். மேலும் அந்த தஜ்ஜாலினால் இஸ்லாத்திற்கு பாதிப்பு ஏற்படும்; ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மூச்சுக் காற்றினால் அவன் அழிந்து போவான் என்றும் கூறியிருந்தார்கள். இவ்வாறிருக்க, வாக்களிக்கப்பட்ட மஸீஹை தங்களுடன் எவ்வாறு ஆங்கிலேயர்கள் இணைத்துக் கொள்வார்கள்? எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்மதியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை ஆங்கிலேயர்கள் (முஸ்லிம்களுக்கு எதிராக) நிறுத்தினார்கள் என்ற இந்த ஆட்சேபனை எவ்வளவு அறிவீனமான ஆட்சேபனையாகும்!

**(தொடரும்..........)**

எழுத்து: மவ்லவி மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்

தமிழாக்கம்: மவ்லவி. A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

**O.A. NIJAM** 99947 57172
**O.A.N. Doors & Steels**
**V.A. SAIT** 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad